விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 196 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 18 செவ்வாய்க்கிழமை (02.07.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## சம்பந்தனின் இறுதிக் கிரியை ஞாயிறு திருகோணமலையில்

### நாளை பாராளுமன்றத்தில் அஞ்சலி

(கொழும்பு)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவர் இரா.சம்பந்தன் எம்.பியின் இறுதிக்கிரியைகள் அவரது சொந்த இடமான திருகோணமலையில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை அரச நிகழ்வாக நடைபெறவுள்ளது.

அதற்கு முன்னர் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்குக் கொழும்பு-பொரளையில் ஏ.எவ்.றேமண்ட் மலர்ச் சாலையில் சம்பந்தனின் பூதவுடல் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப் 15

## சம்பந்தனின் வெற்றிடத்துக்கு குகதாசன்


(கொழும்பு)

தமிழ்த் தேசிய அரசியலின் பெருந் தலைவர் இரா.சம்பந்தன் காலமானதால் வெற்றிடமாகியுள்ள பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கு சண்முகம் குகதாசன் தெரிவு செய்யப்படவுள்ளார்.

திருகோணமலை 15

## சம்பந்தனின் சந்திப்புக்கள் இனிய நினைவுகளாகும்

### இரங்கல் செய்தியில் பாரதப் பிரதமர்



(புதுடில்லி)

சிரேஷ்ட தலைவர் இரா. சம்பந்தனுடனான சந்திப்புகள் இனிய நினைவுகளாகும் என சம்பந்தனின் மறைவுக்கு பாரதப் பிரதமர் மோடி இரங்கல் தெரிவித்துள்ளார்.

அவரது இரங்கல் செய்தியில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மூத்த 15

## வடமராட்சியில் எரிகாயத்துக்கு உள்ளானவர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கில் சந்தேகத்திற்கிடமான முறையில் தீக்காயங்களுக்குள்ளான குடும்பஸ்தர் ஒருவர், யாழ். போதனா வைத் தியசாலையில் கடந்த 10 நாட்களாக சிகிச்சை 15

## கடன் மறுசீரமைப்பு விவாதம் ஒத்திவைப்பு

(கொழும்பு)

கடன் மறுசீரமைப்பு செயற்பாடுகள் தொடர்பில் கடன் வழங்கும் நாடுகளுடன் இலங்கை பாடுபட்ட உடன்படிக்கை மீதான விவாதம் இன்று பாராளுமன்றத்தில் ஆரம்பிக்கப்படவிருந்த 15

## அரசின் பொருளாதாரத் திட்டத்துக்கு எதிராக

# எவரேனும் செயற்பட்டால் நாடு மீண்டும் வீழ்ச்சியடையும்



### அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவிப்பு

(கொழும்பு)

ரணில் அரசாங்கம் முன்னெடுத்துச் செல்லும் பொருளாதார வேலைத்திட்டத்துக்குப் புறம்பாக செயற்பட்டால் நாடு மீண்டும் வீழ்ச்சியடைவதைத் தடுக்க முடியாது என அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

(02ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதித் தேர்தல் உள்ளிட்ட தேர்தல்கள் இந்த வருடமும் அடுத்த வருடமும் நடத்தப்படும்

### ஜனாதிபதி ரணில் மீண்டும் வலியுறுத்து



(மாத்தறை)

ஜனாதிபதி தேர்தல், பொதுத் தேர்தல் மற்றும் மாகாண சபை தேர்தல்கள் இந்த ஆண்டு மற்றும் அடுத்த ஆண்டில் நடத்தப்படும் என ஜனாதிபதி ரணில் 15

## கணவன் கண் முன்னே இளம் குடும்பப் பெண் தூக்கிட்டு உயிர்மாய்ப்பு

### ஆனைக்கோட்டையில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இளம் குடும்பப் பெண் ஒருவர் கணவனின் கண் முன் தூக்கிட்டு உயிர்மாய்த்துள்ளார்.

இதில் சுழிபுரம் மேற்கு ஆனைக்கோட்டை பகுதியைச் சேர்ந்த 02

## மருந்தகத்தை சோதனையிட்ட அதிகாரிகளை பூட்டி வைத்த

### கடை உரிமையாளர் யாழில் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் மருந்தகமொன்றை சோதனையிடச் சென்ற அரச உத்தியோகத்தர்கள் இருவரை பூட்டி வைத்த கடை உரிமையாளரை பொலிஸார் கைது செய்தனர்.

யாழ்ப்பாணம் இராமநாதன் வீதியில் கலட்டிச் சந்தியில் உள்ள மருந்தகமொன்றிலேயே குறித்த சம்பவம் நேற்று இடம் பெற்றது.

சுகாதார அமைச் சகத்தின் உணவுக் 02

## கடன் மறுசீரமைப்புக்குப் பின் இலங்கையின் பொருளாதாரத்துக்கு மேலும் ஆதரவளிக்கத் தயார்

### அமெரிக்கா உறுதியளிப்பு

(கொழும்பு)

கடன் மறுசீரமைப்பு நிறைவடைந்த பின்னர் இலங்கையின் பொருளாதார விவகாரங் களுக்கு மேலும் ஆதரவளிக்க தயாராக 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்றி காக்கும் உங்கள் நாளிதழ்

# மரண அறிவித்தல்

## சண்முகக்குருக்கள் வைத்தீஸ்வரசர்மா (பாலையா)



அளவெட்டி பெருமாக் கடவையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சண்முகக்குருக்கள் வைத்தீஸ்வரசர்மா (பாலையா) 01.07.2024 திங்கட்கிழமை மாலை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகக்குருக்கள் - இராமலட்சுமி அம்மா தம்பதிகளின் பாசமிகு மகனும் அமரர் வைத்தியநாதக் குருக்கள் - பவானி அம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகனும் சுந்தரேஸ்வரி அவர்களின் பாசமிகு கணவரும் சுபாஜினி, சண்முகப்பிரியா, மதுராமசர்மா அவர்களின் அன்புத்தந்தையும் கௌரிகாந்த குருக்கள், மதனகுமார குருக்கள் அவர்களின் பாசமிகு மாமனாரும் நயனிகா, ஆதேஸ், சௌத்திரியன், வைகாஷன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.07.2024) காலை 10 மணிக்கு பெருமாக்கடவையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று 12 மணியளவில் பூதவுடல் தம்மளை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(0128)

தகவல்:
குடும்பத்தினர்

## மருந்தகத்தை...

கட்டுப்பாடு நிர்வாக பிரிவு உத்தியோகத்தர்கள் இருவர்

மருந்தகத்தின் அனுமதி தொடர்பாக மருந்தகமொன்றைசோதனையிட சென்றனர்.

சோதனையில் அதிகாரிகள் ஈடுபட்டிருக்கும் போது அதிகாரிகளை கடை உரிமையாளர் மருந்தகத்திற்குள் வைத்து பூட்டி அச்சுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் யாழ்ப்பாண மாவட்ட விசேட குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாருக்கு அரச அதிகாரிகளால் முறைப்பாடு செய்யப்பட்டது.

இதன்னையடுத்து சம்பவ இடத்திற்கு வந்த யாழ்ப்பாண மாவட்ட விசேட குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார், அனுமதியின்றி மருந்து விற்பனையில் ஈடுபட்டமை மற்றும் அரச உத்தியோகத்தர்களின் கடமைக்கு இடையூறு விளைவித்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டின் கீழ் கடை உரிமையாளரை கைது செய்தனர்.

சந்தேகநபரை யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணை நடத்தும் பொலிஸார், விசாரணைகளுக்கு பின்னர் சந்தேக நபரை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர். (ம-7,10)

## இளம் குடும்பப்...

கதீஸ்வரன் நிலாஜினி லகிதா என்ற 3 பெண் பிள்ளைகளின் தாயாரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரிய வருகையில்,

குறித்த பெண்ணின் கணவர் சுவிஸில் வசித்து வருகின்றார். அவருடன் கடந்த 24ஆம் திகதி வீடியோ அழைப்பில் கதைத்துக்கொண்டு இருந்தவேளை இருவருக்குமிடையே முரண்பாடு ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் குறித்த பெண் கணவனின் கண்முன்னே தூக்கிட்டுள்ளார்.

இதன் போது கணவன் அயல் வீட்டவருக்கு தொலைபேசி மூலம் தெரியப்படுத்தியதையடுத்து அயல் வீட்டார்கள் அவரை மீட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்ப்பித்தனர். அங்கு சிகிச்சை பெற்று வந்த பெண் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ம-7,10)

## எவரேனும்...

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அமைச்சர் பந்துல குணவர்தன இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒரு நாடு என்ற வகையில் இதற்கு முன் னர் 16 தடவைகள் சர்வதேச நாணய நிதியத்திற்குச் சென்றிருந்ததால், இம்முறை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனிப்பட்ட முறையில் கடன் வசதியைப் பெற்றுக்கொள்வதற்கு மிகவும் கடுமையான முயற்சிகளில் ஈடுபட வேண்டியிருந்தது.

இதன் விளைவாக, 2027 ஆம் ஆண்டு வரை சர்வதேச நாணய நிதியத்துடன் நீடிக்கப்பட்ட கடன் ஒப்பந்தத்திற்குச் செல்ல முடிந்தது. சர்வதேச நாணய நிதியத்தின் கடன் ஒப்பந்தத்தின் பின்னரே, நம் நாடு சுவாசிக்கத் தொடங்கியது எனலாம்.

இன்னும் சில மாதங்களில், 2025 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்டம் தயாரிக்கப்பட உள்ளது. வரவு செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டால்தான் அரச ஊழியர்களின் சம்பளம், சிரேஷ்ட பிரஜைகளுக்கான ஓய்வூதியம், சமுர்த்தி, அஸ்வெசும என்பன ஏழைகளுக்கு வழங்கப்படும். மேலும், சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவு இல்லாமல், வரவு செலவுத்திட்டத்தை 2027 வரை தயாரிக்க முடியாது.

சர்வதேச நாணய நிதியம் 2025 வரவு செலவுத் திட்டத்திற்காக 700 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கும். உலக வங்கி 400 மில்லியன் அமெரிக்க டொலர்களையும், ஆசிய அபிவிருத்தி வங்கி 300 மில்லியன் அமெரிக்க டொலர்களையும் வரவுசெலவுத் திட்டத்திற்காக வழங்குகிறது. வரவு செலவுத் திட்ட ஆவணம் தயாரிக்கும் போது மேலும் 3,655 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கடன் நிவாரணமாக கிடைக்கும் என நம்பப்படுகிறது. அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் இவ்வாறுதான் தயாரிக்கப்பட வேண்டும்.

எனவே இந்த நாட்டை நேசிக்கும், எதிர்கால சந்ததிகளுக்காக ஒரு தேசமாக முன்னேறிய மற்றும் அபிவிருத்தி அடைந்த நாட்டில் வாழக்கூடிய சூழலை உருவாக்குவதற்கு இந்த இணக்கமான வேலைத் திட்டங்களை தொடர்ந்து நடைமுறைப்படுத்துவதற்கு நாடு என்ற ரீதியில் அனைவரின் ஆதரவும் தேவை. மேலும், நீடிக்கப்பட்ட கடன் வசதிகள் தொடர்பாக பாராளுமன்றத்தில் விவாதம் நடத்தப்படுவதை யாராவது எதிர்த்தால் அவர்கள் தேச துரோகிகளாக வரலாற்றில் பதியப்படுவார்கள் என்பதைக் கூற வேண்டும் என்றும் அமைச்சர் பந்துல குணவர்தன மேலும் தெரிவித்தார். (ம-7,10)

# கேள்வி அறிவித்தல்

## சாவகச்சேரி பிரதேசசபை

### குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி வேலைத்திட்டம்.(PSDG)

1. தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு, சாவகச்சேரி பிரதேசசபை அவர்கள் தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைக்காக கோருகின்றார்.
2. விலைக் கேள்வியானது தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
3. ஒப்பந்ததாரர்கள் நிர்மாண கைத்தொழில் அபிவிருத் தி அதிகாரசபையின் (CIDA) வீதி/கட்டடம் நிர்மாணத்திற்கு கீழ்க் குறிப்பிடப்படும் தரத்தினைக் கொண்டிருப்பதோடு, இவ் விலைமனுக் கோரலானது தகுந்த வியாபார அல்லது கம்பனிப் பதிவுகளை கொண்டுள்ளதும், கறுப்புப் பட்டியலில் (Black list) சேர்த்துக்கொள்ளப்படாததுமான கேள்விதாரருக்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
4. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule -5) பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
5. கேள்விகள் சமர்ப்பிக்கும் போது பெறுமதி சேர் வரி (VAT) வலுவிலுள்ள சான்றிதழ் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அவ்வாறான ஆவணங்கள் உள்ளடங்கிய கேள்விதாரருக்கு மாத்திரமே வரிக் கொடுப்பனவைக் கோரமுடியும்.
6. ஆர்வமுள் ள கேள்விதாரர்கள் செயலாளர் சாவகச்சேரி பிரதேசசபை, A9 வீதி, கொடிகாமம் (தொலைபேசி : 021-2050348, 0212050356 தொலைநகல் : 021-2050348) எனும் முகவரியில் அமைந்துள்ள தலைமை அலுவலகத்தில் மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய அலுவலகத்தில் 2024.07.02 தொடக்கம் 2024.07.16 வரையான காலப்பகுதியில் அலுவலக நாட்களில் மு.ப 09.00 மணி முதல் 15.00 மணி வரை கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
7. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆங்கில மொழியிலான கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதி ஒன்றை செயலாளர், சாவகச்சேரி பிரதேசசபை, A9 வீதி, கொடிகாமம் எனும் முகவரியில் 2024.07.02 ஆம் திகதியிலிருந்து 2024.07.16 ஆம் திகதி வரை காலை 09.00 மணிக்கும் பி.ப. 15.00 மணிக்கும் இடையில் மீளளிக்கமுடியாத கட்டணமாக ஒவ்வொரு கேள்வி ஆவணத்திற்கும் ரூபா. 2,000.00 செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத் தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
8. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்வியை இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதி, நகல்பிரதி என தனித்தனி உறைகளிட்டு தலைவர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, சாவகச்சேரி பிரதேசசபை, A9 வீதி, கொடிகாமம் எனும் முகவரிக்கு 2024.07.17 ஆம் திகதி காலை 10.30 மணிக்கு முன்பதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
9. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழ்வரும் அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.
10. சாவகச்சேரி பிரதேசசபை மாநாட்டு மண்டபத்தில் 2024.07.09 ஆம் திகதியன்று காலை 10.30 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டம் நடைபெறும். ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் அவர்களின் சொந்த செலவிலேயே விலைமனு முன்னோடிக் கூட்டத்திற்கு சமுகமளிக்கலாம்.

| இல | கேள்வி எண் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (வரி நீங்கலாக (Mn) | ஒப்பந்த காலம் (நாட்கள்) | வேண்டப்படும் தரம் | கேள்விப் பிணை வைப்பு (ரூபா) | கேள்விப் பிணை செல்லுபடியாகும் காலம் |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | NP/14/41 (6)/PSDG /2024/01 | Renovation of Kali kovil 14th Road at Thavasikulam. | 4.235 | 84 | C8&C7 | 42,500.00 | 2024.10.15 |

விலைக் கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடாத்தப்படும். இக் கொள்வனவின் மூலம் நடாத்தப்படும் வேலைக்கான மதிப்பீட்டுத் தொகை (VAT மற்றும் வேறுவரிகள்) 50 மில் லியனுள் இருப்பின், பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA தர முன்னுரிமை என்பன பொதுநிதிச் சுற்றறிக்கை இல 01/2016(III) மற்றும் பின்னூட்டல் இல் குறிப்பிடப்பட்டவாறு பின்பற்றப்படும்.

**தலைவர்.**
**உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு,**
**சாவகச்சேரி பிரதேசசபை.**
**2024.07.02**

(C-0720)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீனவர்களை விடுவிக்கக்கோரி சாலை மறியல் போராட்டம்



(மன்னார்)

எல்லை தாண்டி மீன்பிடித்த 4 நாட்டு படகுகளையும் அதிலிருந்து 25 மீனவர்களையும் இலங்கை கடற்படை கைது செய்துள்ளமையை கண்டித்து பாம்பன் மீனவர்கள் நேற்று காலை கடலில் இறங்கி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இலங்கை நெடுந்தீவு கடற்பரப்பில் மீன் பிடித்துக் கொண்டிருக்கும் போது அப்பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்டு இருந்த இலங்கை கடற்படையினர் 4 நாட்டு படகுகளையும் அதிலிருந்து 25 மீனவர்களையும் கைது செய்து காங்கேசன் துறை கடற்படை முகாமிற்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

மீனவர்களின் இந்த சாலை மறியலால் மதுரை தனுஷ்கோடி தேசிய நெடுஞ்சாலையில் நீண்ட நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. இதையடுத்து அதிகாரிகள் நடத்திய பேச்சுவார்த்தையின் அடிப்படையில் மீனவர்கள் தங்களது போராட்டத்தை தற்காலிகமாக ஒத்தி வைத்துள்ள நிலையில் மீனவர்கள் விடுதலை செய்யப்படாவிட்டால் மீனவர்கள் போராட்டம் தொடரும் என தெரிவித்தனர். (நி-6-285)

# மீண்டும் போராட்டத்திற்கு தயாராகும் இலங்கை ஆசிரியர் சங்கம்

(கொழும்பு)

**தமது கோரிக்கைகளுக்கு விரைவில் பதில் வழங்குமாறு கோரி ஆசிரியர் -அதிபர் தொழிற் சங்க கூட்டமைப்பு இன்று பாடசாலைகளுக்கு முன்பாக போராட்டம் நடத்தத் திட்டமிட்டுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.**

மேலும் எதிர்வரும் வெள்ளிக்கிழமை அரச துறையில் உள்ள அனைத்து தொழிற் சங்கங்களையும் ஒன்று திரட்டி ஆசிரியர் அதிர்கூட்டணியாக இணைக்க தயாராக இருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

ஆசிரியர் - அதிபர் சம்பள முரண்பாடுகளை நீக்குதல் உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து ஆசிரியர் - அதிபர் தொழிற்சங்க கூட்டமைப்பு நேற்று பாடசாலைகளுக்கு முன்பாக கறுப்புக்கொடி மற்றும் பதாகைகளை ஏந்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பாடசாலை நேரத்தின் பின்னர் இன்று போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

தொழிற்சங்க நடவடிக்கைகள் கடுமையாக முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும், பெற்றோர்கள் இந்த நிலைமையை புரிந்து கொள்ள வேண்டும் எனவும் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் நேற்று நடை பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# 'ஆலயத்தின் புனிதத்தை பாதுகாப்போம்' திருக்கோணேஸ்வரத்தில் போராட்டம்

(திருமலை)

திருகோணமலையில் அமைந்துள்ள திருக்கோணேச்சரர் ஆலயத்தின் புனித தன்மையை பாதுகாக்க கோரி நேற்றுக்காலை திருகோணமலை நகர சபைக்கு அண்மையில் உள்ள திருக்கோணேஸ்வர ஆலய பரிபாலன சபைக்கு முன்பாக கவனயீர்ப்பு போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

குறித்த கவனயீர்ப்பு போராட்டத்தினை திருக்கோணேஸ்வர ஆலய பரிபாலன சபையினர், தொண்டர்கள் மற்றும் சைவ அடியார்கள் இணைந்து இதனை ஏற்பாடு செய்தனர்.




திருக்கோணேஸ்வர ஆலய அண்மித்த கடைத் தொகுதியில் கசிப்பு விற்பனை செய்த குற்றச்சாட்டில் ஒருவர் கைதாகியதையடுத்து அதனை சீல் வைக்கச் சென்ற திருகோணமலை நகர சபை ஊழியர் மீது தாக்குதல் நடத்தப்பட்டது.

இதனை கண்டித்தும் புனித தன்மையை பாதுகாக்க அரச துறை அதிகாரிகள் முன்வர வேண்டும் எனவும் இதன் போது வலியுறுத்தப்பட்டது.

இப் புனித ஆலய சுற்றுச்சூழலை பாதுகாக்கவும் சட்ட ரீதியாக கடையை சீல் வைக்க சென்றவரை தாக்கியதும் கண்டிக்கத்தக்கது எனவும் இதன் போது தென்கையிலை ஆதீனம் அகத்தியர் அடிகளார் தெரிவித்தார்.

இன்றைய கவனயீர்ப்பு போராட்டத்தில் ஆலய பரிபாலன சபை தலைவர், உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (நி-6)

# தன்னை விடுவிக்குமாறுகோரி ஹிருணிகா மேன்முறையீடு



(கொழும்பு)

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர, தனக்கு விதிக்கப்பட்டுள்ள மூன்று வருட சிறைத் தண்டனையிலிருந்து தன்னை விடுவிக்குமாறு கோரி மேன்முறையீட்டு மனு வைத் தாக்கல் செய்துள்ளார்.

இந்த மனு மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு அனுப்பி வைப்பதற்காக கொழும்பு மேல் நீதிமன்றில் கையளிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனக்கு வழங்கப்பட்ட தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், தன்னை பிணையில் விடுவிக்குமாறு ஹிருணிகா பிரேமச்சந்திர கொழும்பு மேல் நீதிமன்றில் கோரிக்கை விடுத்துள்ளார்.

மேலும் இது தொடர்பான கோரிக்கை நாளை மறுதினம் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி அமுல் ரணராஜா முன்னிலையில் பரிசீலிக்கப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி-6)

# இ.போ.ச - தனியார் பஸ் மோதி விபத்து

## 15 பேர் மருத்துவமனையில்

(கொழும்பு)

கொழும்பு - கண்டி பிரதான வீதியில் வெவல்தெனிய பிரதேசத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற பஸ் விபத்தில் 15 பேர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ்ஸும் தனியார் பஸ்ஸும் மோதி விபத்து ஏற்பட்டுள்ளது.

காயமடைந்தவர்கள் வத்துப்பிட்டிவல மற்றும் வறக்காப்பொல மருத்துவமனைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (நி-6)



# வெற்றிலை செய்கையை விஸ்தரிக்க நடவடிக்கை

(கொழும்பு)

ஏற்றுமதிக்கான வெற்றிலைப் பயிர்ச்செய்கையை விஸ்தரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வடமேல் மாகாணத்தை மையப்படுத்தி இந்த நடவடிக்கை முன்னெடுக் கப்பட்டுள்ளதாக பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு தெரிவித்துள்ளது. இதற்கான நவீன தொழில் நுட்பத்தைப் பெற்று கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## ஓய்வை அறிவித்த 3 ஜாம்பவான்கள்






ரி-20 உலகக் கிண்ணத் தொடரில் ரோகித் சர்மா தலைமையிலான இந்திய அணி கோப்பையை வென்று சாதனை படைத்தது.

போட்டி முடிந்ததும் இந்திய அணியின் முன்னணி வீரர்களான விராட் கோலி, ரோகித் சர்மா ஆகியோர் சர்வதேச ரி-20 கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வை அறிவித்தனர்.

இந்நிலையில், ரி-20 உலகக் கிண்ணம் வென்ற இந்திய அணியில் இடம்பெற்றிருந்த முன்னணி ஆல்ரவுண்டரான ரவீந்திர ஜடேஜாவும் சர்வதேச ரி-20 கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வுபெறுவதாக அறிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, ஜடேஜா தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில், நன்றி நிறைந்த இதயத்துடன் சர்வதேச ரி-20 போட்டிகளில் இருந்து விடை பெறுகிறேன். ஒரு வலிமையான குதிரை துள்ளிக் குதிப்பதை போல, எப்போதும் என் நாட்டிற்காக என்னால் முடிந்ததை செய்து வருகிறேன். ஆனால் டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளில் தொடர்ந்து விளையாடுவேன். ரி-20 உலகக் கிண்ணத்தை வெல்ல வேண்டும் என்ற கனவு நனவாகிவிட்டது. இது எனது உச்சம். என்னுடைய நினைவுகளுக்கும், வாழ்த்துகளுக்கும், உங்களின் அசைக்க முடியாத ஆதரவுக்கும் நன்றி என பதிவிட்டுள்ளார். (ரி-6)

## வெற்றியுடன் விடை பெற்றார் ராகுல் டிராவிட்



இந்திய அணியின் தலைமை பயிற்சியாளராக ராகுல் டிராவிட் பதவிக்காலம் "ரி-20"உலகக் கிண்ண பைனலுடன் நிறைவடைந்தது.

கடந்த 2007 இல் வெஸ்ட் இண்டீசில் நடந்த உலகக் கிண்ண (50 ஓவர்) தொடரில் டிராவிட் தலைமையில் களமிறங்கிய இந்தியா லீக் சுற்றோடு வெளியேறியது. இம்முறை இவரது பயிற்சியின் கீழ் அசத்திய இந்தியா, வெஸ்ட் இண்டீஸ் மண்ணில் "ரி-20" உலக கக் கிண்ணத்தை வென்று சாதித்தது.

இது குறித்து டிராவிட் கூறுகையில், "இந்திய அணி உலக சாம்பியன் பட்டம் வென்ற தருணம் என் வாழ்வில் என்றும் மறக்க முடியாத ஒன்று. இதற்காக வீரர்களுக்கும், சக பயிற்சியாளர் குழுவினருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். இனி வரும் நாட்களில் இந்திய அணி நிறைய உலகக் கிண்ணம் வெல்லும் என்று நம்புகிறேன், என்றார். (ரி-6)

# மரண அறிவித்தல்



மலர்வு
05.01.1963

உதிர்வு
29.06.2024

## திருமதி சிவராசா சகுந்தலாதேவி (ராணி)

சந்தையடி உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் சுவிஸ், சந்தையடி உடுப்பிட்டி ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிவராசா சகுந்தலாதேவி(ராணி) அவர்கள் 29.06.2024 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் சுப்பிரமணியம் சிவராசா அவர்களின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான சிவஞானம் - நாகம்மா தம்பதியினரின் இளைய மகளும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - தங்கச்சியம்மா தம்பதியினரின் மருமகளும் கனகம்மா, காலஞ்சென்ற தனபாலசிங்கம் மற்றும் கண்மணி, அம்பிகாதேவி, காலஞ்சென்றவர்களான நல்லைநாதன், தில்லைநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் அருளானந்தவடிவேல், காலஞ்சென்ற கமலாதேவி மற்றும் கலாமணி, மகேந்திரன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை (03.07.2024) புதன்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வல்லை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

சந்தையடி,
உடுப்பிட்டி.

தகவல் :
குடும்பத்தினர்

(C-0724)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல்களை ஒத்திவைக்க அரசாங்கம் சதிமுயற்சி

(கொழும்பு)

தேர்தல்களை ஒத்திவைப்பதற்கான அரசாங்கத்தின் சதிமுயற்சிகள் குறித்து மக்கள் போராட்ட முன்னணி நேற்று தேர்தல் ஆணையத்திற்கு சென்று தேர்தல் ஆணையாளருடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுள்ளது

மக்கள் போராட்ட முன்னணியை பதிவு செய்வது மற்றும் தேர்தல்களை நடத்துவதற்கான தயார் நிலை குறித்தும் இந்த சந்திப்பில் ஆராயப்பட்டுள்ளதாக தெரிவித்த சமூக அரசியல் செயற்பாட்டாளர் ராஜ்குமார் ரஜீவ்காந் மேலும் தெரிவித்துள்ளதாவது.

கூட்டணியை பதிவு செய்வது தொடர்பாக ஆராய்வதற்காகவும் ரணில்விக்கிரமசிங்க தொடர்ச்சியாக மக்கள் ஆணையற்ற ஒரு ஜனாதிபதியாக தொடர்வதற்கான ஒரு முயற்சியை மேற்கொண்டவண்ணமுள்ளார்.

தேர்தல்களை பிற்போடுவதற்கான ஜனநாயக முறையற்ற ஒரு செயற்பாட்டை செய்வதற்கான முழு வேலைகளை அவர் செய்துகொண்டிருப்பதாக நாங்கள் சந்தேகிக்கின்றோம் எனவேதான் அது தொடர்பாக தேர்தல் ஆணையாளரிடம் சில விடயங்களை கேட்டறிந்திருந்தோம். சில முறைப்பாடுகளையும் முன்வைத்திருந்தோம்.

மக்கள் ஆணையற்று பாராளுமன்றத்திற்குள் வந்தவர் ஜனாதிபதி என்ற விடயம் ஒன்று இருக்கும்போது மறுமுனையிலே எந்த ஒரு தேர்தலையும் நடத்தாமல் தொடர்ந்து தான் அதிகாரத்தை தக்கவைக்க வேண்டும் என்ற சிந்தனையிலேயே இயங்கிக் கொண்டிருக்கின்றார். இதற்கு எதிராக நாங்கள் தொடர்ச்சியாக குரல் கொடுப்போம் இந்த ஜனநாயக விரோத செயற்பாடுகளிற்கு எதிராக எங்களுடைய போராட்டங்கள் தொடரும் என அவர் தெரிவித்தார். (நி-6)

## தீவிரமடையும் எலிக்காய்ச்சல்!

# இந்த ஆண்டில் இதுவரை 5 ஆயிரம் பேர் அடையாளம்

(கொழும்பு)

**நாட்டில் எலிக்காய்ச்சல் நோய் பரவும் ஆபத்தான மண்டலங்களாக அடையாளம் காணப்பட்டுள்ள 17 மாவட்டங்களில் உள்ள பாடசாலைகள் மற்றும் வீடுகளுக்குச் சென்று தடுப்பு நடவடிக்கைகள் குறித்து சுகாதார அமைச்சு அறிவுறுத்தவுள்ளதாக தெரிவித்துள்ளது.**

இதன்படி, சுகாதார அமைச்சினால் கிட்டத்தட்ட 1,200 சுகாதார பரிசோதகர்கள் மற்றும் 3,500 குடும்ப சுகாதார செவிலியர்கள் பணியில் அமர்த்தப்படுவார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வருடம் நாடு முழுவதும் சுமார் 5,000 எலிக்காய்ச்சல் நோயாளர்கள் கண்டறியப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரச மருத்துவமனைகளில் வழங்கப்படும் இலவச மருந்தை உட்கொள்ளாத எலிக்காய்ச்சலால் பாதிக்கப்பட்ட 100 நோயாளிகள் ஆண்டுதோறும் இறக்கின்றதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இந்த வருடத்தில் குருநாகல் , கேகாலை, இரத்தினபுரி , மாத்தறை , களுத்துறை மற்றும் மொனராகலை ஆகிய மாவட்டங்களில் எலிக்காய்ச்சலினால் பாதிக்கப்பட்டவர்களில் அதிகமானோர் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# அமைதியான இலங்கையை காண கனடா விரும்புகிறது -எரிக் வோல்ஷ்

(ஒட்டாவா)

கனடா, அமைதியான வளமான மற்றும் நல்லிணக்கமான இலங்கையை காண விரும்புகிறது என் இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான கனடாவின் உயர்ஸ்தானிகர் எரிக் வோல்ஷ் தெரிவித்துள்ளார்.

ஜூலை 1, கொண்டாடப்படும் கனடா தினத்தை முன்னிட்டு விடுத்துள்ள செய்தியில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

கனடாவின் சர்வதேச உதவியானது பெண்கள் மற்றும் சிறுமிகளை மேம்படுத்துவதற்கும், அனைவரையும் உள்ளடக்கிய காலநிலைக்கு ஏற்ற வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கும் மற்றும் மோதலுக்குப் பின்னரான சமாதானம் மற்றும் நல்லிணக்கத்தை முன்னெடுப்பதற்குமான, இலங்கையின் முயற்சிகளுக்கு வழங்கப்படுகிறது.

முழுமையான பொருளாதார மீட்சியை முன்னெடுத்துச் செல்லும் இலங்கையுடன் கனடா தொடர்ந்து நிற்கிறது என்று அவர் தெரிவித்தார். (நி-6)

# சர்வதேச நாடுகளின் தலைவர்கள் சம்பந்தனின் மறைவுக்கு இரங்கல்

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் இலங்கை தமிழரசுக் கட்சியின் பெரும் தலைவருமான இரா. சம்பந்தனின் மறைவு குறித்து சர்வதேச நாடுகளின் தலைவர்களும் இரங்கல் வெளியிட்டுள்ளனர்.

இலங்கையில் சமாதானமான சமூகத்தை கட்டியெழுப்புவதை முதன்மையாக கொண்டு மறைந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் இலங்கை தமிழரசுக் கட்சியின் பெரும் தலைவருமான இரா.சம்பந்தன் அரசியலில் ஈடுபட்டதாக இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

இரா.சம்பந்தனின் மறைவு காரணமாக இலங்கை பாரிய தொரு இழப்பை சந்தித்துள்ளதாக ஐக்கிய நாடுகளின் இலங்கைக்கான வதிவிட ஒருங்கிணைப்பாளர் மார்க் அன்றூ பிரேன்ச் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களுக்காக கடந்த காலங்களில் தொடர்ந்தும் குரல் கொடுத்து வந்த சம்பந்தனின் அர்ப்பணிப்பு மற்றும் சேவை எப்போதும் நினைவில் இருக்குமென இலங்கைக்கான பிரித்தானியாவின் உயர்ஸ்தானிகர் அன்ட்ரூ பற்றிக் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

மேலும், இலங்கையில் உள்ள தமிழர்களின் உரிமைகளுக்காக இரா. சம்பந்தன் நீண்ட காலமாக போரடியதாகவும் தமிழ் அரசியலில் அவர் முக்கிய உறுப்பினராக திகழ்ந்ததாகவும் உலக தமிழர் பேரவை வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளது. (நி-6)

# இராசிபலன்

02.07.2024
ஆனி 18, செவ்வாய்க்கிழமை,
ஏகாதசி முற்பகல் 9.29 மணிவரை
பரணி காலை 6.35 மணிவரை

கார்த்திகை பின்னிரவு 5.36 மணிவரை
சுபநேரம் -10.26-11.56 மணிவரை
இராகுகாலம் -2.56-4.26 மணிவரை
கார்த்திகை விரதம், ஏகாதசி விரதம்

சித்தாமிர்தம்,
சந்திராஷ்டமம்.
உத்தரம்.

**வளவன்**

**மேஷம்**
யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள், காலைப் பொழுதே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், பணப்புளக்கம் அதிகரிக்கும் நாள்.

**கடகம்**
பணப்புளக்கம் அதிகரிக்கும் நாள், ஊக்குத் தோடும் உற்சாகத் தோடும் பணிபுரிவீர்கள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, கௌரவமானநாள்.

**துலாம்**
சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, விரயங்கள் மேலோங்கும் நாள், உடல் நலனில் கவனம் தேவை, கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டியநாள்.

**மகரம்**
ஏட்டிக்குப் போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், செல்வாக்கு மேலோங்கும் நாள், சுப செய்திகள் வந்து சேரலாம், பிள்ளைகள் நலனில் அக்கறை கூடும்.

**ரிஷபம்**
பெருமைகள் வந்து சேர இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் செய்திகள் வந்து சேரலாம், கற்பனை மிகுதியான நாள்.

**சிம்மம்**
கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்**
தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், திடீர் பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.

**கும்பம்**
வளர்ச்சிப் பாதைக்கு நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், சுப செய்திகள் வந்து சேரலாம், தாய்வழி உறவினர் வழியில் அனுகூலமுண்டு.

**மிதுனம்**
எடுத்த செயலை முடிக்க அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள், நீங்கள் சந்திக்க நினைத்த நபர் உங்களைத் தேடி வரலாம், வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள்.

**கன்னி**
பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, மறைமுக எதிர்ப்புகள் மாறும், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, பதிய முயற்சிகளில் ஆர்வம் கூடும்.

**தனுசு**
இனத்தார் பகைமாற எடுத்த முயற்சிகள் கைகூடும், வியாபர விரோதம் விலகும், கடன் சுமை குறைய வழிவகை செய்வீர்கள், புகழ்மிக்வர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**மீனம்**
பகை விலகி பாசம் கூடும் நாள், நண்பர்கள் வட்டம் விரிவடையும், முத்தான வாய்ப்புக்கள் வந்து சேரலாம், செய்தொழில் மேன்மையுண்டு, போசன சுகமுண்டு.

**கனவு என்பது உனது வாழ்வின் முடிவு அல்ல ஆரம்பம் ஆகும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நாட்டின் பிளவுகளைக் குறைக்க பாடுபட்ட தலைவர் சம்பந்தன்

### ஜனாதிபதி இரங்கல்



தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் ஒரு தேசியத் தலைவராக நம் நாட்டில் ஏற்பட்ட பிளவுகளைக் குறைக்க அயராது பாடுபட்டார் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

அவரது மறைவிற்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவரது இழப்பிற்கும் நாடு முழுவதும் இரங்கல் தெரவிக்கும் என ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

## தனது முழு வாழ்க்கையையும் தமிழர்களுக்காக அர்ப்பணித்தவர்

### இந்திய வெளிவிவகார அமைச்சர் இரங்கல்



இலங்கைத் தமிழ் தலைவர் இரா.சம்பந்தனின் மறைவுச் செய்தி கேட்டு ஆழ்ந்த மன வருத்தம் அடைகின்றேன்

பல தசாப்தங்களாக அவருடனான எனது பல சந்திப்புக்கள் மற்றும் உரையாடல்களை நினைவுபடுத்துகின்றேன். இலங்கையில் தமிழர்களுக்கான சமத்துவம், கண்ணியம், மற்றும் நீதிக்காக தனது முழு வாழ்க்கையையும் அர்ப்பணித்தவர். அவரது குடும்பத்தினருக்கும் ஆதரவாளர்களுக்கும் இரங்கல்கள் என தெரிவித்தார்.

## பெரும் பலத்தினை தமிழினம் இழந்துள்ளது

### இந்துக் குருமார் அமைப்பு

எமது தமிழினம் ஓர் பெரும் பலத்தினை இழந்த சூழலில் உள்ளது. சுமார் ஆறு தசாப்தங்களாக பாராளுமன்ற உறுப்பினராக விளங்கி ஆற்றல் மிகு சக்தியாக தமிழ் மக்கள் மத்தியில் விளங்கிய ஓர் பண்புமிக்க அறிவாளனை இழந்துள்ளோம்.

பல்வேறு நாட்டு தலைவர்களாலும் இராஜ தந்திரிகளாலும் மதிக்கப்பட்டவர். எமது தமிழ் பிரதி நிதிகளை ஓர் அணியாக செயற்பட வேண்டும் என செயற்பட்டவர்.

நிதானமாக நுண்ணறிவுடன் செயலாற்றிய, தலைமை தாங்கிய தலைவரை இழந்துள்ளோம். இச்சமயத் தில் அமரரது ஆத்ம சிவப்பிராப்திக்கு இந்துக் குருமார் அமைப்பின் சார்பில் இறை பிரார்த்தனை செய்கிறோம்.

# சம்பந்தனின் இழப்பு காலத்தின் பேரிழப்பு

### அஞ்சலி நிகழ்வில் சிறீதரன் எம்.பி



தமிழ் மக்களைப் பொறுத்தவரை சம்பந்தனின் இழப்பு காலத்தின் பேரிழப்பாகும். அவரின் எண்ணங்களையும் சிந்தனைகளையும் கருத்தில் கொண்டு அவர் விட்டுச்சென்ற பயணத்தில் நாங்கள் ஒற்றுமையாக இணைந்து தமிழ்த் தேசியத்தை வென்றெடுப்போம் என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

இறந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் அவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக தமிழரசுக்கட்சியின் கிளிநொச்சி அலுவலகத்தில் கட்சியின் கொடி அரைக்கம்பத்தில் பறக்க விடப்பட்டு திருவுருவப்படத்திற்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் உள்ளிட்ட கட்சி ஆதரவாளர்கள் கலந்து கொண்டனர்.

தமிழ்த்தேசிய இனத்தின் மிகப் பெரும் தலைவராக நீண்ட காலம் தமிழ் இனத்தை வழி நடத்திய பெருந்தலைவரை தமிழ்த்தேசிய இனம் இழந்துள்ளது.அவர் மூப்பின் காரணமாக இறந்திருந்தாலும் தமிழர்களின் விடு தலைப் பயணத்தில் 1960இற்கு பின்பு சிறந்த பணிகளை ஆற்றிய சட்டத்தரணியும், எதிர்கட்சி தலைவரும், எமது கட்சியின் தலைவருமான சம்பந்தன் ஐயாவின் இழப்பு தமிழ் மக்களைப் பொறுத்த வரை காலத்தின் பேரிழப்பாகும்.

அவருடைய இறப்பு நாளிலே அவருடைய எண்ணங்களையும் சிந்தனைகளையும் கருத்தில் கொண்டு அவர் விட்டுச்செல்லும் பயணத்தில் நாங்கள் எல்லோரும் ஒன்றாக இணைந்து எங்கள் தமிழ் மக்களுக்கான தேசிய அபிலாசைகளை தமிழ்த்தேசிய இனத்தின் அடிப்படை உரிமைகளை வென்றெடுப்பதற்கான நீண்ட பயணத்தில் எங்களுடைய கரங்களை ஒன்றாக இணைத்து பயணிப்பதே நாங்கள் அவருக்கு செய்யும் பணியாக மாறும்.

அதிலும் குறிப்பாக தென் தமிழீழத்தில் உதித்த ஒரு மனிதனாக வடக்கையும் கிழக்கையும் இணைத்து வடகிழக்கு இணைப்புக்கு மூல காரணமாக இருந்து பெரும் பாங்காற்றியவர். தேசியத் தலைவராலும் அங்கீகரிக்கப்பட்ட தலைவரை எங்கள் தேசம் இழந்திருக்கிறது என அவர் தெரிவித்தார்.

## கொள்கை வேறு ; கோட்டை வேறு ஆனாலும் அஞ்சலிகள்- அமைச்சர் டக்ளஸ்



கொள்கை வேறு. கோட்டை வேறாக இருப்பினும் அரசியல் தளத்தில் எம்முடனும் சம காலத்தில் பயணித்தவர் சம்பந்தன் எம்.பி என கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இரங்கல் தெரிவித்துள்ளார்.

தமிழரசுக் கட்சியின் தலைவர் இரா.சம்பந்த னின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து வெளியிட்ட இரங்கல் அறிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர் இரா.சம்பந்தன் அவர்கள் வயதில் எமக்கு மூத்தவர்.

முரண்பாடுகள் இருப்பினும் காணும் பொழுதுகளில் அரசியல் நிலைமைகள் குறித்து கலந்துரையாடுவதுண்டு.

வயது மூப்பின் காரணமாக அவர் மரணித்திருந்தாலும் அச்செய்தி துயரைத் தந்துள்ளது.

அவரது இழப்பில் துயருறும் சகலருக்கும் ஆறுதல் கூறுகின்றேன். அஞ்சலி மரியாதை என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வெளியிட்டுள்ள இரங்கல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## தமிழினத்திற்காக ஒலித்த குரல் மௌனித்து விட்டது -ஆளுநர்



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சிரேஷ்ட தலைவரும், பாராளுமன்ற உறுப்பினரும், இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 14 ஆவது எதிர்க்கட்சித் தலைவரும், சிரேஷ்ட அரசியல்வாதியும், சட்டத்தரணியுமாகிய இராஜவரோதயம் சம்பந்தன் அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து கவலை அடைகின்றேன்.

சுமார் ஐந்து தசாப்த அரசியல் வரலாற்றில் மிக நீண்ட காலம் தமிழ் மக்களின் உரிமைக் குரலாக இலங்கை பாராளுமன்றத்தை பிரதி நிதித்துவம் செய்ததுடன், தமிழ் மக்களின் உரிமைக்காக சர்வதேச ரீதியிலும் செயற்பட்ட தலைவராக செயற்பட்டவர்.

இன ஐக்கியம், ஒருமைப்பாடு, நல்லிணக்கம் என்பவற்றின் அடிப்படையில் நாட்டு மக்களின் நன்மை கருதி அன்னார் செயற்பட்டார் என்றால் மிகையாகாது.

இத்தகைய ஒரு பெரும் தலைவரின் இழப்பானது தமிழ் மக்களுக்கு அர சியல் ரீதியில் நிரப்ப முடியாத வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை.

அன்னாரின் மறைவானது இலங்கை வாழ் மக்களுக்கு பேரிழப்பாகும். தமிழ் மக்களின் உரிமைகளுக்காக ஓங்கி ஒலித்து கொண்டிருந்த குரல் இன்று மௌனித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெடுந்தீவு கடற்பரப்பில் 25 தமிழக மீனவர்கள் கைது

(யாழ்ப்பாணம்)

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன் பிடித்த குற்றச்சாட்டில் 25 தமிழக கடற்றொழிலாளர்கள் நேற்று திங்கட்கிழமை அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

நெடுந்தீவு கடற்பரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருக்கும் போது அப்பகுதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட இலங்கை கடற்படையினர் குறித்த கைது நடவடிக்கையை முன்னெடுத்ததுடன் நான்கு நாட்டுப் படகுகளையும் பறி முதல் செய்துள்ளனர்.

கைதான கடற்றொழிலாளர்கள் மயிலிட்டி மீன்பிடித் துறைமுகத்திற்கு அழைத்துச் சொல்லப்பட்டுள்ள நிலையில் விசாரணைகளின் பின்னர் கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களத்தினரினர் ஊடாக ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (நி-6-33-285)



சட்டத்திற்கும் மனித உரிமைக்குமான நிலையத்தினால் மனித உரிமை டிப்ளோமா கற்கை நெறியை பூர்த்தி செய்த மாணவர்களிற்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு யாழ்.இந்துக் கல்லூரி சபாலிங்கம் மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. (படம்- சிவசாந்தன்-சுபேசன்)

# வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் யாழில் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு- கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் நேற்று யாழில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ் மாவட்ட செயலகம் முன்பாக வடக்கு- கிழக்கு வலிந்து காணா மலாக்கப்பட்டவர்களின் உறவுகளால் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்தி ஒவ்வொரு மாதத்தின் முதலாம் திகதியிலும் போராட்டம் முன் னெடுக்கப்படும் நிலையில் குறித்த போராட்டம் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

இந்த போராட்டத்தில் வலிந்து காணா மலாக்கப்பட்டவர்களின் உறவுகள், பெற்றோர் என பலரும் கொண்டு காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி கோரி போராட்டத்தில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6-33)

# கலாதரம் இதழ்-5 ஆக்கங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் தென் மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலக கலாசாரப் பிரிவினரால் 2024 ஆம் ஆண்டு பிரதேச மலர் "கலாதரம்" மலர் 5 வெளியீடு செய்யப் படவுள்ளமையால், பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட எழுத்தாளர்களிடமிருந்து ஆக்கங்கள் கோரப்படுகின்றன.

பிரதேசத்தின் வரலாறு, பண்பாடு, கலை, கலாசாரம், சமயம், மருத்துவம், பாரம்பரிய விடயங்கள், பிரதேச ஆளுமைகள், வாய்மொழிப் பாரம்பரியங்கள், வைத்திய முறைகள், நாட்டார் வழக்காற்றியல் விடயங்கள், சிறுகதை, கவிதை, கட்டுரை, குறுநாடகம், துணுக்குகள், வரலாற்றுப் பெறுமதி வாய்ந்த புகைப்படங்கள் முதலான விடயப்பரப்புக்களில் ஒன்றினை உள்ளடக்கி ஆக்கங்களை வரைந்து (தங்களைப் பற்றிய விபரங்களையும், சிறிய புகைப்படத்தினையும், தொலைபேசி இலக்கத்தினையும் இணைக்க வேண்டும்) எதிர்வரும் 14.07. 2024 ஆம் திகதிக்கு முன்னர் பிரதேசசெயலகம், சண்டிலிப்பாய் எனும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு சண்டிலிப்பாய் வலி. தென் மேற்கு பிரதேச செயலாளர் திருமதி. மதியழகன் சுபாஜினி அறிவித்துள்ளார். (நி-6)


## இலவசமாக ஆரம்பித்து விட்டோம்!

### தென்னைச் செய்கையாளர்களின் கவனத்திற்கு!!

தேங்காய் உற்பத்தியினைக் கூட்டுவதற்காக பெருந்தோட்ட, வீட்டுத் தோட்டத் தென்னைச் செய்கையாளர்களின் நீண்டகால கோரிக்கைக்கு ஏற்ப **"தென்னை விவசாய ஆலோசனை சேவைகள் பிறைவேட் லிமிரெட்"** என்ற நிறுவனத்தினை 03.7.2024 இலிருந்து செயற்படுத்தவுள்ளோம்.

இந் நிறுவனம் மூலம் தென்னைச் செய்கையாளர்களுக்கு தேவையான **இலவசமாக** தென்னை, விவசாயம் சம்பந்தமான ஆலோசனைகளை நேரில் கீழ் முகவரியிடப்பட்டிருக்கும் எமது அலுவலகத்தில் ஒவ்வொரு புதன்கிழமையும் காலை 9.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை பெற்றுக் கொள்ள முடியும். வடக்கு,கிழக்கு உட்பட நாட்டின் எப் பகுதியிலும் உள்ள தென்னந் தோட்டங்களிற்கு சென்று தென்னை ஆலோசகர்களினால் ஆலோசனைகள் வழங்கவுள்ளோம் என்பதனையும் அறியத் தருகின்றோம்.

(1364)

திரு.ஜெ.சத்தியேந்திரன்
077 505 6263
(தென்னை ஆலோசகர்)

திரு.வை.தேவராசா
077 377 1147
(விவசாய ஆலோசகர்),

முகவரி:-
20, றக்கா லேன்,
(பொஸ்கோ பாடசாலை வீதியில்
இளங்கதிர் சனசமூக
நிலையத்திற்கு முன்பாக உள்ள வீதி)
யாழ்ப்பாணம்.



## யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் (ஸ்ரான்லி கல்லூரி)

### பழைய மாணவர் சங்க பொதுச் சபைக் கூட்டம்

இடம் :- கல்லூரி பிரதான மண்டபம்
காலம் :- 21.07.2024 ஞாயிற்றுக்கிழமை
நேரம் :- காலை 9.30 மணி
தலைமை :- திரு.க.ஜெயபாலசிங்கம் அவர்கள்

- மேற்படி பொதுச்சபைக் கூட்டத்தில் ஆயுட் கால அங்கத்தவர்கள் அனைவரையும் புதிதாக இணைய விரும்பும் பழைய மாணவர்களையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
- பிரேரணைகள் ஏதும் இருப்பின் எதிர்வரும் 10.07.2024 (புதன்கிழமை) இற்கு முன்பதாக பின்வரும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமோ அனுப்பி வைத்தல் வேண்டும்.

செயலாளர்,கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கம், 433, நாவலர் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.

(சி-714)

க.ஜெயபாலசிங்கம்
தலைவர் - 077 620 4703

பா.பாலவரதன்
செயலாளர்-077 553 0753



## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு:1990- இந்து<br>நட்சத்திரம்:திருவாதிரை 2 இல் செவ்<br>உயரம் : 5'3"<br>தகைமை/ தொழில்:HND civil Engineering, Assistant Engineer.<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/14606 | பிறப்பு- 1991 -இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>12 இல் சூரி செவ்<br>உயரம் : 5'3"<br>தகைமை/தொழில்: A/L, Bank(ஜேர்மன்)<br>எதிர்பார்ப்பு:ஜேர்மனில் உள்ள மணமகன், படித்த மணமகன்<br>தொ.இ: G/14610 |
| பிறப்பு:1988- இந்து<br>நட்சத்திரம்:அத்தம் 12 இல் செவ்<br>உயரம் :5'6"<br>தகைமை/தொழில்: MD, Doctor<br>எதிர்பாாப் பு:Doctor, Bank officer, Accountant, Engineer<br>தொ.இ: B/14609 | பிறப்பு-1992- இந்து<br>நட்சத்திரம்:அச்சுவினி<br>கி.பா:10 1/2 2இல் செவ்<br>உயரம் : 5'<br>தகைமை/தொழில்: A/L, வங்கி பயிலுனர்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு, PR உள்ளவர்<br>தொ.இ: G/14611 |
| பிறப்பு:1987-இந்து<br>நட்சத்திரம்: அஸ்வினி<br>உயரம் :5'3"<br>தகைமை/ தொழில்:A/L, வியாபாரம்<br>எதிர்பார்ப்பு: குடும்பபாங்கான பெண்<br>தொ.இ: B/14613 | பிறப்பு-1996-இந்து<br>நட்சத்திரம்:மிருகசீரிடம்<br>உயரம் :5'4"<br>தகைமை/ தொழில்: A/L, Teacher<br>எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்<br>தொ.இ: G/14612 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

# போரை முடிக்க உக்ரைன் முடிவு



(கீங்)

ரஷ்யாவுடனான போரினை முடிவுக்கு கொண்டு வருவதற்கான ஒப்பந்தத் திட்டத்தை வெளியிடவுள்ளதாக உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் ஜெலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.

குறித்த விடயம் தொடர்பில் நேற்று முன்தினம் இடம் பெற்றுள்ள ஊடக வியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

குறித்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், ரஷ்யாவுடன் நடந்துவரும் போரை கூடிய விரைவில் முடிவுக்குக் கொண்டுவர வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இந்தப் போரில் ராணுவ வீரர்கள் மற்றும் பொது மக்களின் உயிரிழப்பு நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது. எனவே, போர் நிறுத்தத்தை இனியும் தள்ளிப் போட முடியாது.

ராட்சிய ரீதியில் போர் நிறுத்த ஒப்பந்தம் மேற்கொள்வதற்கான முயற்சிகள் தொடங்கிவிட்டன. விரைவில், அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கிய உக்ரைனின் போர் நிறுத்த ஒப்பந்தத் திட்டம் வெளியாகும்.

நேட்டோஅமைப்பில் உக்ரைன் இணைவதற்கு எதிர்ப்பு தெரிவித்து அந்த நாட்டின் மீது ரஷ்யா கடந்த 2022 ஆம் ஆண்டு படையெடுத்தது. தற்போது உக்ரைனின் சுமார் ஐந்தில் ஒரு பகுதி ரஷ்ய கட்டுப்பாட்டில் உள்ளது. இருந்தாலும், ரஷ்யாவால் இணைத்துக் கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ள 4 பிராந்தியங்களின் சில பகுதிகள் இன்னும் உக்ரைன் படையினர் கட்டுப்பாட்டிலேயே உள்ளன.

அந்தப் பகுதிகளைக் கைப்பற்ற ரஷ்யாவும் இழந்த பகுதிகளை மீட்க உக்ரைனும் தொடர்ந்து போரிட்டு வருகின்றன.

2 ஆண்டுகளுக்கும் மேல் நடைபெற்றுவரும் இந்தப் போரில் பெரிய அளவில் முன்னேற்றம் ஏற்படாத நிலையில் போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான செயற்றிட்டத்தை ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் கடந்த மாதம் முன்வைத்தார்.

அதில் தங்களால் இணைத்துக் கொள்ளப் பட்ட உக்ரைன் பிராந்தியங்களிலிருந்து அந்த நாட்டுப் படையினர் வெளியேறுவது, நேட்டோவில் இணையும் முயற்சியை உக்ரைன் கைவிடுவது ஆகிய நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டால் போரை நிறுத்த ஒப்புக் கொள்வதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-6)

# பிரான்...

> தீவிர வலது...
> துடைத்தெறி...
> வர்த்தக நிலை...
> வன்முறைக...



இதனால், தலைநகர் பாரிஸின் பல பகுதிகளில் வன்முறை வெடித்துள்ளதோடு, பொதுச் சொத்துக் களும் சேதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரான்ஸ் பாராளுமன்ற தேர்தலில் தீவிர வலதுசாரிகள் முன்னிலைபெற்றுள்ள அதே வேளை தற்போதைய ஜனாதிபதி இமானுவேல் மக்ரோனின் கட்சி

# அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் பைடன் போட்டியிட வேண்டும்

## குடும்பத்தினர் வலியுறுத்து

(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ஜோ பைடன் போட்டியிடவேண்டும் அவர் போட்டியிலிருந்து விலகக் கூடாது என அவரது குடும்பத்தினர் வற்புறுத்தியுள்ளனர் என அமெரிக்க ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்புடனான நேரடிவிவாதத்தின் போது ஜோபைடன் தடுமாறியதை தொடர்ந்து அவர் போட்டியிலிருந்து விலகவேண்டும் என்ற கருத்துக்கள் காணப்படும் நிலையிலேயே இந்த தகவல் வெளியாகியுள்ளது.

ஜோ பைடன் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை காம்ப் டேவிட்டில் தனது குடும்பத்தவர்களை சந்தித்துள்ளார்.

குடும்பத்தவர்களுடனான சந்திப்பின்போது அவரது அரசியல் எதிர்காலம் குறித்து கலந்துரையாடப்பட்டதாக கார்டியன் தெரிவித்துள்ளது.

காம்ப்டேவிட் சந்திப் பின் போது ஜோபைடனின் மனைவி, பிள்ளைகள், பேரப் பிள்ளைகள் கலந்து கொண்டுள்ளனர்.

தன்னால் மேலும் நான்கு வருடங்களிற்கு அமெரிக்க ஜனாதிபதியாக பதவி வகிக்க முடியும் என்பதை பைடனால் அமெரிக்க மக்களிற்கு நிரூபிக்க முடியும் என குடும்பத்தவர்கள் தெரிவித்தனர் என நியுயோர்க் டைம்ஸ் டைம்ஸ் தெரிவித்துள்ளது.

முதல்விவாதத்தில் அவர் மிகவும் பலவீனமான விதத்தில் நடந்துகொண்டதை அறிந்துள்ள அவரது குடும்பத்தினர் அதேவேளை டொனால்ட் ட்ரம்ப்பை தோற்கடிக்க கூடிய ஒரேயொருவர் பைடனே என கருதுகின்றனர்.

போட்டியிலிருந்து விலக வேண்டும் என விடுக்கப்படும் வேண்டுகோள்களை புறக்கணிக்கவேண்டும் என ஜோபைடனின் மனைவியும் மகன் ஹன்டருமே அதிகளவிற்கு வற்புறுத்தினார்கள் என ஏபி தெரிவித்துள்ளது. (நி-6)

### கூட்டு இராணுவப் பயிற்சி

# நிறைவடைந்த நிலையில் வட கொரியா ஏவுகணை பரிசோதனை



(பியாங்யாங்)

தென்கொரியா, அமெரிக்கா,ஜப்பான் இடையேயான கூட்டு ராணுவப்பயிற்சி நிறைவடைந்த நிலையில் வடகொரியா ஏவுகணை சோதனை நடத்தியுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது

வடகொரியாவின் பிஜாங்யாங் நகரில் இருந்து வடகிழக்கு திசையை நோக்கி 10 நிமிட இடைவெளியில்2 ஏவுகணைகள் ஏவப்பட்டதுடன் முதல் ஏவுகணை கடலில் விழுந்ததாகவும், இரண்டாவது ஏவுகணை வட கொரிய நிலப்பரப்பிற்குள்ளேயே விழுந்ததாகவும் தென் கொரிய இராணுவம் தெரிவித்துள்ளது.

மேலும் வடகொரியா கடந்த 26ஆம் திகதி ஏவுகணை சோதனை நடத்திய நிலையில் 10 நாட்களுக்குள் 2ஆவது முறையாக மீண்டும் ஏவுகணை சோதனை நடத்திய சம்பவம் கொரிய தீபகற்பத்தில் பதற்றத்தை ஏற்படுத்தி யுள்ளமையும் குறிப்பிடத் தக்கது. (நி-6)

# தென்கொரிய பா...

## வடகொரிய இளைஞனு...

(பியாங்யாங்)

தென் கொரியாவின் கே-பாப் இசையை கேட்டதற்காகவும், தென் கொரிய திரைப்படங்களை பார்த்ததற்காகவும் 22 வயது வாலிபர் ஒருவருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

வடகொரியாவின் தெற்கு ஹவாங்கே மாகாணத்தைச் சேர்ந்த அந்த வாலிபர், 2022 ஆம் ஆண்டு 70 தென் கொரியப் பாடல்களைக் கேட்டதாகவும், மூன்று திரைப்படங்களைப் பார்த்ததாகவும், அவற்றைப் பகிர்ந்ததாகவும் குற்றம்சாட்டப்பட்டது.

இந்த வழக்கில் அவர் குற்றவாளி என உறுதி செய்யப்பட்டதையடுத்து அவர் பொது இடத்தில் தூக்கிலிடப்பட்டதாக, வட கொரிய மனித உரிமைகள் பற்றி திகார்டியன் இதழ் வெளியிட்டுள்ள ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வாதிகார ஆட்சி நடைபெறும் வட கொரியாவில் அரசுக்கு எதிராகவோ, அந்நாட்டின் தலைவர் கிம் ஜாங் உன்னுக்கு எதிராகவோ யாரும் எதுவும்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# வெளிநாடு

# ன்ஸில் வெடித்தது கலவரம்!

## வலதுசாரி கட்சி முன்னிலையில்
## தெறியப்பட்டது மக்ரோனின் கட்சி
## நிலையங்கள், வாகனங்கள் தீக்கிரை
## றைகளால் மூவர் உயிரிழப்பு, பலர் காயம்



**(பாரிஸ்)**

**பிரான்ஸ் பாராளுமன்ற தேர்தலில் தீவிரவலதுசாரி கட்சி முன்னிலை பெற்றதைத் தொடர்ந்து எதிர்த் தரப்பினர் வன்முறைப் போராட்டங்களில் ஈடுபட்டுள்ளனர்.**



மூன்றாவது இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளது.

குடியேற்றவாசிகளிற்கு எதிரான ஆர்.என். கட்சி 33 வீத வாக்குகளைப் பெற்றுள்ள அதேவேளை இடதுசாரி கூட்டணி 28 வீத வாக்குகளை பெற்றுள்ளது. ஜனாதிபதி இமானுவேல் மக்ரோனின் கூட்டணிக்கு 21 வீத வாக்குகள் கிடைத்துள்ளதாக பிரான்ஸ் ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

மக்ரோனின் கட்சி முற்றாக துடைத்தெறியப்பட்டுள்ளது என ஆர்.என்.கட்சியின் மரைன் லெபென் தெரிவித்துள்ள அதேநேரம், பிரான்ஸ் மக்கள் வாக்களித்தால் நான் அனைத்து பிரான்ஸ் மக்களினதும் பிரதமராக தயார் என ஆர்.என். கட்சி தலைவர் ஜோர்டன் பர்டெல்லா தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், இதற்கு எதிராக தீவிர இடதுசாரிகள் இஸ்லாமிய ஆதரவாளர்கள் உட்பட சமூகத்தின் பலதரப்பட்டவர்கள் இந்த வன்முறைப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இதனால், பாரிஸில் அமைந்துள்ள வர்த்தக நிலையங்களும் வாகனங்களும் தீக்கிரையாக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸாருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களிற்கும் இடையில் மோதல்கள் இடம்பெற்று வருவதால், அங்கு பதற்றமானதொரு சூழலும் ஏற்பட்டுள்ளது.

இந்த வன்முறைகளில் இதுவரை 3 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் பலர் காயமடைந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வன்முறையில் ஈடுபட்டுள்ள சிலர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், பாரிஸின் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டுள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவித்துள்ளன.

பிரான்ஸ் பாராளுமன்ற தேர்தலின் முதல் சுற்றில் தீவிர வலதுசாரிகள் வெற்றிபெற்றுள்ளமை அதன் வரலாற்றில் இதுவே முதல்தடவை என்பதும் குறிப்பிடத்தக்கது. (நி-6)

# பாடலைக் கேட்ட
# னுக்கு மரணதண்டனை!



செய்ய முடியாத அளவுக்கு கடும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக மேற்கத்தேய கலாசாரங்கள் கொண்ட பொழுதுபோக்கு, உடை உள்ளிட்ட விடயங்களில் அங்கு பாரியளவிலான கட்டுப்பாடுகள் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# இந்து மத தர்மமே கைகொடுக்கும்
## பிரதமர் ரிஷி சுனக்

(லண்டன்)

இந்து மத நம்பிக்கையில் இருந்து உத்வேகமும், ஆறுதலும் கிடைப்பதாக பிரித்தானிய பிரதமர் ரிஷி சுனக் தெரிவித்துள்ளார்.

650 தொகுதிகள் கொண்ட பிரிட்டன் பாராளுமன்ற பொதுத்தேர்தல் நாளை மறுதினம் நடைபெறவுள்ளது.

இந்நிலையில், லண்டனில் உள்ள சுவாமி நாராயண் கோவிலுக்குச் சென்று தரிசனம் செய்த ரிஷி சுனக், தனது தேர்தல் பிரசார உரையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது, பகவத் கீதையை வைத்து, பாராளுமன்ற உறுப்பினராக பதவியேற்றதில் தான் பெருமை அடைவதாகவும், நமது கடமையை உண்மையாகச்



செய்யவேண்டும் எனவும் ரிஷிக் சுனக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், இந்து மத நம்பிக்கையில் இருந்து உத்வேகமும், ஆறுதலும் கிடைப்பதாகவும், இதை தனது அன்பான பெற்றோர் தனக்கு கற்றுக் கொடுத்து வளர்த்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார். தற்போது தான் தனது பிள்ளைகளுக்கும் இதனை கற்று கொடுப்பதாகவும், பொது சேவை செய்ய தர்மம் தான் தனக்கு வழிகாட்டுவதாக பிரித்தானிய பிரதமர் தனது உரையில் குறிப்பிட்டார். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் விசாக்கட்டணத்தை இருமடங்காக்கியது அவுஸ்திரேலியா

(கன்பெரா)

சர்வதேச மாணவர்களுக்கான விசாக் கட்டணத்தை இரு மடங்காக அதிகரித்துள்ளதாக அவுஸ்திரே லியா அறிவித்துள்ளது.

அதன்படி, 710 அவுஸ்திரேலிய டொலராக இருந்த விசாக் கட்டணம் தற்போது 1,600 டொலராக அதி கரித்துள்ளது.

இந்த கட்டண உயர்வு நேற்று முதல் அமுலுக்கு வருவதாக அறி விக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலிய பிரதமர் ஆண் டனி அல்பனேசி தலைமையிலான அர சாங் கம், மாணவர்களின் இடம் பெயர்வைக் கட்டுப்படுத்தும் நோக்கில் இந்தக் கட்டண உயர்வை ஏற்படுத் தியுள்ளதாக சர்வதேச செய்திகள் தெரி விக்கின்றன.

இந்த விசாக் கட்டண உயர்வு, சர்வ தேச கல்வி முறையின் தரத்தை மேம் படுத்தவும், இடம் பெயர்வை குறைக்கவும், சிறப்பாகவும் மாற்ற அவுஸ்திரேலியா விற்கு உதவும் என, அவுஸ்தி ரேலிய உட்துறை அமைச்சர் கிளேர் ஓ' நீல் தெரிவித்துள்ளார்.

எனினும், இந்த முடிவு சர்வதேச மாணவர்களின் கல்விக் கட்ட ணத்தை நம்பியுள்ள பல்கலைக் கழகங்கள் மற் றும் பொருளாதாரம் இரண்டுக்கும் உகந் ததல்ல என, அவுஸ்திரேலிய பல்கலைக் கழகக் குழுவின் தலைவர் லூக் ஷீஹி தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா, பிரித்தானிய நாடு களை விட அவுஸ்திரேலியாவின் மாணவர் விசாக் கட்டணம் உயர்ந் துள்ளது.

இதேவேளை கடந்த மார்ச் மாதம் வெளியான தரவுகளின் படி, கடந்த ஆண்டு செப்டம்பர் வரை அவுஸ் திரேலி யாவில் குடியேறு பவர்கள் 60 வீதத்தால் உயர்ந்து 5 இலட்சத்து 48 ஆயிரத்து 800 பேரை எட்டியுள்ளதாகத் அந்நாட்டு தகவல்கள் தெரிவிக்கின்றமை குறிப்பிடத் தக்கது. (நி-6)

# நல்லூர் மூத்த விநாயகர் கொடியேற்றம் நாளை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் மூத்த விநாயகர் தேவஸ்தானத்தின் வருடாந்த மகோற்சவம் நாளை புதன் கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினாங்கள் இடம் பெற வுள்ளது.

எதிர்வரும் 11 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் 12 ஆம் திகதி வெள் ளிக்கிழமை காலை 8 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் மாலை கொடியிறக்கமும் இடம்பெறும் என ஆலய தர்மகர்த்தாசபையினர் அறிவித்துள்ளனர். (நி-6-33)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 300 | 300 | 250-300 | 300 |
| உருளைக்கிழங்கு | 180 | 210 | 190 | 185 | 200 |
| பச்சைமிளகாய் | 160 | 140 | 150 | 130 | 200 |
| தக்காளி | 800 | 750 | 650 | 600 | 700 |
| மரவள்ளிக்கிழங்கு | 140 | 160 | 140 | 100-120 | 200 |
| கோவா | 300 | 300 | 280 | 200 | 300 |
| கரட் | 300 | 550 | 550 | 350 | 500 |
| பூசணி | 50 | 180 | 160 | 150 | 200 |
| புடோல் | 160 | 300 | 200 | 200 | 250 |
| வாழைக்காய் | 160 | 200 | 140 | -- | 200 |
| சின்ன வெங்காயம் | 350 | 380 | 300 | 300-580 | 400 |
| பெரிய வெங்காயம் | 250 | 220 | 250 | 230 | 250 |
| பாகற்காய் | 1500 | 700 | 1200 | 800 | 1400 |
| வெண்டக்காய் | 200 | 250 | 200 | 300 | 400 |
| கருணைக் கிழங்கு | 180 | 200 | 180 | 150 | 200 |
| பயற்றங்காய் | 250 | 200 | 200 | 250-300 | 300 |
| லீக்ஸ் | 600 | 300 | 500 | 350 | 500 |
| பீற்றூட் | 600 | 550 | 700 | 450 | 600 |
| கறிமிளகாய் | 800 | 700 | 700 | 400 | 700 |
| முருங்கைக்காய் | 1800 | 900 | 900 | 700-900 | 1200 |
| போஞ்சி | 800 | 700 | 700 | 400 | 800 |
| கத்தரிதம்புள்ள | 200 | 250 | 300 | -- | 240 |
| கீரை - 1 பிடி | 50 | 80 | 50 | 50 | 80 |
| தேசிக்காய் | 800 | 1000 | 800 | 700-900 | 1000 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 110 | 80 | 60-110 | 80-120 |
| இராசவள்ளி | 450 | 500 | 400 | 300 | 450 |
| வெங்காயப்பூ | 400 | 400 | 400 | -- | 400 |
| முள்ளங்கி | 140 | 180 | 150 | 300 | 350 |
| பொன்னாங்காணி | 80 | 90 | 100 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 40 | 80 | 80 | 80 |
| ஈரப்பலா | 150 | 150 | 120 | 100 | 250 |

## இன்று ஒரு தகவல் 170



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# மன்னரும் கவிஞரும்

ஒரே ஒரு ஊரிலே ஒரு ராஜா இருந்தார். அவர் பெயர் போஜ ராஜா. அவர் அரச சபையிலே ஒரு கவிஞர் இருந்தார். அவர் பெயர் காளிதாசர்.

என்னங்க...? இது எல்லாம் தெரிஞ்ச பெயர் தானே? ஏதோ புதிதாக சொல்வது மாதிரி ஆரம்பிக்கின்றீர்களே! அப்படி என்று நினைக்கின்றீர்களா? சின்னப் பிள்ளைகளுக்கு இப்படி ஆரம்பித்தால் தான் பிடிக்கும். அதனாலே அப்படி ஆரம்பித்தேன். வேற ஒன்றுமில்லை. இப்போது விடயத்துக்கு வருகின்றேன்.போஜராஜா ஒரு நாள் காளிதாசரைக் கூப்பிட்டார். என் மேலே ஒரு பாட்டுப்பாடு என்றார். நீ பாடுகின்ற பாட்டு எப்படி இருக்க வேண்டும் என்றால் நான் இறந்து போன பிறகு நீ எப்படி பாடுவியோ அப்படி இருக்க வேண்டும். அது மாதிரி பாடு என்று கேட்டுக் கொண்டார்.

போஜராஜானே அதுமாதிரி நான் இரங்கற்பா பாடினால் நீ நிஜமாகவே இறந்து போய் விடுவாய் ஏனென்றால் என் நாக்கிலே சரஸ்வதி இருப்பதனாலே சொன்னால் பலித்துவிடும் அதனாலே அது வேண்டாம் என்றார் காளிதாசர். அவர் இப்படி சொன்னவுடனே ராஜாவிற்கு கோபம் வந்து விட்டது. ராஜா பேச்சை மதிக்கவில்லை என்றால் சும்மாவா? உடனே காளிதாசரை தேசப்பிரஷ்டம் பண்ணிவிட்டார். அதாவது நாடு கடத்திவிட்டார். ஏதோ அவசரத்திலே அப்படி செய்துவிட்டாரே தவிர ராஜாவிற்கு கொஞ்ச நாளிலே வருத்தமாக போய்விட்டது. மிகவும் கவலைப்பட ஆரம்பித்து விட்டார்.

ஒரு நல்ல நண்பன் என்னை விட்டு போய்விட்டாரே என்று சொல்லி மிகவும் வருத்தப்பட்டார். சரி எங்கே இருந்தாலும் தேடி கண்டுபிடிக்க வேண்டும். என்று முடிவு செய்தார். ஒரு குடுகுடுப்பைகாரன் போல வேடம் போட்டுக் கொண்டு அவரைத் தேடிப் புறப்பட்டார். ஊர் ஊராக அலைந்தார்.

ஒரு ஊருக்கு வந்து சேர்ந்தார். அங்கே ஒரு கசாப்புக்கடை. அதற்கு முன்னாலே ஒரு சந்நியாசி நின்று கொண்டிருந்தார். அவர் விளையாட்டாக கறி என்ன விலை என்று கசாப்புக் கடைக்காரரிடம் விசாரித்துக் கொண்டிருந்தார். அதை போஜராஜா பார்த்தார். அந்த சந்நியாசி வேற யாரும் இல்லை அது தான் காளிதாசர் என்பதை அடையாளம் கண்டு பிடித்தார். ஆனாலும் காளிதாசருக்கு ராஜாவை அடையாளம் தெரியவில்லை. இவரு தான் குடுகுடுப்பைகாரன் வேடத்திலே வந்திருக்காரே. வேடப் பொருத்தம் அப்படி.

ராஜா அவரைப் பார்த்து ஏன் சுவாமி காவி துணி கட்டிக் கொண்டு இப்படி கறி விலை என்ன என்று கேட்டுக் கொண்டிருக்கின்றீர்களே இது நியாயமா என்று கேட்டார். இதற்கு அவரு தான் எப்போதும் மாமிசம் சாப்பிடுவதில்லை. மது அருந்தும் சமயங்களில் மட்டும் அதைச் சாப்பிடுவேன் என்றார். அவர் அசந்து போயிவிட்டார். ஏன் இப்படி அசந்துபோய் நிற்கின்றீர்கள் உங்கள் ஊரிலே இது எல்லாம் கிடையாதா ? நீங்கள் எந்த ஊர் என்று கேட்டார். நான் தாரா நகர் என்றார் ராஜா உடனே சந்நியாசி கோலத்திலே இருந்த காளிதாசர் தாரா நகரமா? அங்கே உள்ள போஜராஜா எனக்கு மிகவும் நெருக்கமான நண்பர். எப்படி இருக்கின்றார் என விசாரித்தார்.

நேற்று தான் அவர் இறந்தார் என்றார் ராஜா. காளிதாசர் அதிர்ச்சி ஆகிவிட்டார்.கண்களில் கண்ணீர் உடனே தாரா நிராதாரா என்று ஒரு சுலோகம் பாடினார். சரஸ்வதிக்கு பற்றுக் கேடு இல்லாமல் போய்விட்டது. என்னை மாதிரி புலவர்கள் இனிமேல் கண்டிக்கப்படுவார்கள் போஜராஜா நீ மோட்சலோகம் போயிவிட்டாயே அப்படி என்கின்ற அர்த்தத்திலே காளிதாசர் இரங்கற்பா பாடினார். அவ்வளவு தான் போஜராஜா சட்டென்று கீழே விழுந்து இறந்து விட்டார். அதன் பின் காளிதாசருக்கு விடயம் புரிந்தது. உடனே என் நண்பருக்கு உயிர் பிச்சை கொடு என்று சரஸ்வதியிடம் வேண்டிக் கொண்டார். உடனே சரஸ்வதிதேவி காட்சி கொடுத்தார்கள். அவரை பிழைக்க வைக்கிறேன் ஆனால் முழு ஆயுளையும் தர முடியாது. ஏழரை நாழிகைக்கு ஆயுள் தருகின்றேன். அதன் பின் மீண்டும் இறந்து விடுவார் என்றார்.

ஏழரை நாழிகை என்பது மூன்று மணித்தியாலங்கள் அவ்வளவும் தான். போஜராஜா பிழைத்து எழுந்தார். ஏழரை நாழிதான் ஆயுள் என்று தெரிந்ததும் ஒரு வினாடி கூட வீணடிக்கக் கூடாது என்று முடிவு செய்தார். காளிதாசரைப் பார்த்து கையெடுத்து கும்பிட்டார். நானும் நீயும் சேர்ந்து ஒரு ராமாயணம் பாடலாம் என்றார். இரண்டு பேரும் மாறிமாறி பாடி ஏழரை நாழிகையிலே ராமாயணம் முழுவதையும் பாடி முடித்தார்கள். அதற்கு போஜசம்பு என்று பேர்.

போஜராஜா ஏழரை நாழிகையிலே இறந்து போனார். போஜசம்பு இறக்கவில்லை. இது நிலைத்தது. எதற்கு இந்த கதை சொல்ல வந்தேன் என்றால் இந்த காலத்திலே எல்லாம் எழுதினவங்க இறந்து போவார்கள். அவர்கள் எழுதி வைப்பது இறப்பதில்லை. இந்த காலத்திலே எல்லாம். எழுத்துக்கு ஆயுள்குறைவு. எழுதுபவர்களுக்கு அந்த பிரச்சனை இல்லை.


நான் ஒரு இந்த காலத்து எழுத்தாளரைப் பார்த்து விளையாட்டாக கேட்டேன் ஒரு கேள்வி. போஜராஜாவிற்கு வந்த நிலைமை உங்களுக்கு ஏற்பட்டால் என்ன செய்வீர்கள் என்று கேட்டேன். அதாவது ஏழரை நாழிகை இருக்கப்போது என்று சொன்னதும் அவர் ராமாயணம் எழுதினார் நீங்களா இருந்தால் என்ன எழுதுவீர்கள் என்று கேட்டேன். இதற்கு அவர் உயில் எழுதுவேன் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய மீனவர்களின் அத்துமீறல்களை தடுக்கக் கோரி மீனவர்கள் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

**இந்திய கடற்றொழிலாளர்களை கைது செய்ய முற்பட்ட வேளை உயிரிழந்த கடற்படை வீரருக்கு அஞ்சலி செலுத்தி குறித்த சம்பவத்திற்கும் கண்டனம் தெரிவித்தும், இந்திய மீனவர்களின் அத்துமீறல்களை தடுத்து நிறுத்த கோரியும் யாழ்ப்பாணத்தில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.**



யாழ். மாவட்ட கடற்றொழிலாளர்கள் கூட்டுறவு சங்க சமாசங்களின் சம்மேளனத்தினரால் நேற்று யாழ் மருதடி சந்தியில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட குறித்த போராட்டம் இந்திய துணை தூதரகத்தை நோக்கி சென்றது

தூதரகத்துக்கு அருகில் போராட்டகாரர்களை இடைமறித்த பொலிஸார், தூதரக அதிகாரிகளை சந்திப்பதற்கு ஐந்து பேருக்கு மட்டும் அனுமதி வழங்கப்பட்டது.

இலங்கை கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து கடந்த 24 ஆம் திகதி மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய கடற்றொழிலாளர்களை கைது செய்ய முற்பட்ட வேளை, கடற்றொழிலாளர்களின் செயற்பாட்டினால் கடற்படை வீரர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இவ்வாறான செயற்பாடு மீள ஒரு தடவை நடை பெறாது இருக்க இந்திய மத்திய அரசும், தமிழக அரசும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென யாழ் மாவட்ட கடற்றொழிலாளர்கள் கோரியுள்ளனர். இக் கோரிக்கையை முன்வைத்து மகஜர் ஒன்றினையும் இந்திய துணைத் தூதரக அதிகாரிகளிடம் யாழ். மாவட்ட கடற்றொழிலாளர்கள் கூட்டுறவு சங்க சமாசங்களின் சம்மேளனத்தினர் கையளித்துள்ளனர். (நி-6-33)

# ஜம்போ, நிலக்கடலை செய்கை பாதிப்பு

(தருமபுரம்)

கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவிற்கு உட்பட்ட புன்னை நீராவி பிரமந்தனார் நாதன் குடியிருப்பு பகுதிகளில் நிலக்கடலை, ஜம்போ ஆகியவை அறுவடை செய்து வரும் நிலையில் உரிய விலை இன்றி விற்பனை செய்ய முடியாத நிலையில் களஞ்சியப்படுத்தி வைத்து இருப்பதாக விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

ஆயிரம்ரூபாய்க்குவிதையை கொள்வனவு செய்து ஜம்போ செய்கையினை மேற் கொண்ட நிலையில் 500 தொடக்கம் 400 ரூபாய்க்கு விற்க முற்படுவதன் காரணமாக போதியளவு வருமானத்தினை பெற முடியாத நிலையில் இருப்பதாக விவசாயிகள் கவலை தெரிவித்தனர். (நி-6-316)

# இணுவில் கந்தசுவாமி கோவில் மகோற்சவம்

(யாழ்ப்பாணம்)

இணுவில் கந்தசுவாமி கோவில் மகோற்சவம் கடந்த மாதம் 11 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 25 தினங்கள் உற்சவங்கள் இடம்பெற்று வருகின்றது.

இன்று செவ்வாய்க்கிழமை மாலை 7 மணிக்கு கைலாய வாகனத்திருவிழாவும் நாளை புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வேட்டைத்திருவிழாவும் அன்று மாலை 7.30 மணிக்கு சப்பறத்திருவிழாவும் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு தீர்த்தத்திரு விழாவும் அதனைத் தொடர்ந்து கொடியிறக்க வைபவமும் இடம் பெறும். (நி-6-33)

# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் வவுனியாவில் கவனயீர்ப்பு



(குருமன்காடு)

காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு சர்வதேச நீதி கோரி வவுனியாவில் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப் பட்டது.

வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் சங்கத்தால் பழைய பேருந்து நிலையம் முன்பாக நேற்று முன்தினம் குறித்த கவனயீர்ப்பு போராட்டம் இடம் பெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் "எமக்கு சர்வதேச நீதியே வேண்டும், எங்கே எங்கே பிள்ளைகள் எங்கே, ஓஎம்பி அலுவலகம் எமக்கு வேண்டாம், கையில் கொடுத்த பிள்ளைகளுக்கு மரண சான்றிதழ் எதற்கு, நாம் இழப்பீட்டை கோரவில்லை, கையில் தந்த எமது சிறுவர்கள் எங்கே" என எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியிருந்ததுடன் கோசங்களையும் எழுப்பி போராட்டத்தில் ஈடுபட்டனர். (நி-6-250)

# கொக்கோ மூலம் டாக் சொக்லேட்

## முல்லையில் பரீட்சாத்த முயற்சி வெற்றியளிப்பு



(நெளுக்குளம்)

வடமாகாணத்தில் முல்லைத்தீவு மாவட்டத்தில் கொக்கோ பயிர் செய்கையானது வெற்றியளித்துள்ளதன் மூலம் பல்வேறு வகையான பெறுமதி சேர் உணவு உற்பத்தி வகைகள் தயாரிக்கப்பட்டும் வருகின்றது.

இலங்கையைப் பொறுத்தவரையில் கொக்கோ பயிர் செய்கையானது இடை, ஈர வலயங்களில் அதிகளவாக செய்கை பண்ணப்பட்டு வருகின்றது. இருப்பினும் உலர் வலயத்திலும் இப்பயிர் செய்கையினை மேற் கொள்ள முடியும் என்பதற்கு எடுத்துக்காட்டாக முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டு சுட்டான் பிரதேசத்தில் அமைந்துள்ள மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் கொக்கோ செய்கை மேற் கொள்ளப்பட்டு வருகின்றது. அதில் ஒரு முயற்சியாக டாக் சொக்லேட் செய்யும் பரீட்சாத்த முயற்சி வெற்றியளித்துள்ளது.

கொக்கோ பயிர்மூலம் டாக் சொக்லேட் செய்யும் முறை பற்றியும் மாவட்ட விவசாயப் பயிற்சி நிலைய பண்ணை முகாமையாளர் துமிலன் வழிகாட்டலுடனும், முல்லைத்தீவு பிரதி மாகாண விவசாய பணிப்பாளர் யாமினி சசீலன் ஆலோசனையுடனும், ஒட்டு சுட்டான் விவசாய போதனாசிரியர் அனோதினி சிவனேஸ்வரன் விளக்கமளித்துள்ளனர்.

குறித்த கொக்கோவில் இருந்து பல்வேறு வகையான பெறுமதி சேர் உற்பத்திகளை மேற்கொள்வதுடன் கொக்கோவில் அதிகளவு இலிப்பிட்டு, புரதம், மாப்பொருள், நார்ப்பொருள், அத்தியவசியமான அமினோ அமிலங்கள் என்பனவும் காணப்படுகின்றன.

அதே வேளை குறித்த கொக்கோ பயிர் செய்கையை முல்லைத்தீவு மாவட்டம் உள்ளிட்ட வடமாகாணத்தில் விஸ்தரிப்பதற்கான முன்னாயத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-6-299)



குமரபுரம் 6 ஆம் வீதி கலைச்செல்வி மோகனபவனின் நினைவு தினத்தை முன்னிட்டு பிளாஸ்ரிக் இல்லாத நாட்டை உருவாக்கும் எனும் தொனிப்பொருளில் நேற்று கிளிநொச்சி பொலிஸாருக்கு பிளாஸ்ரிக் கழிவுகளை சேகரிக்கும் கூடைகள் வழங்கி வைக்கப்பட்டது.

(படம்- தேவானந்தன்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 3

காவியத் தொடர் 522





செயலற்று நின்ற பூங் குழலி உயிர் பெற்றாள். ஒரு பாய்ச்சல் பாய்ந்து இளவ ரசர் அருகில் வந்து அவரைக் கடலில் விழாமல் தடுப்ப தற்காக ஒரு கரத்தைப் பற் றினாள். சுர வேகத்தினால் இளவரசர் பெற்றிருந்த மத யானையின் பலம் உடனே மாயமாய்ப் போய்விட்டது. சின்னஞ்சிறு குழந்தையைப் போல் ஆனார்.

"அக்கா! நீ சொல்கிற படியே பேசாமல் படுத்தி ருக்கிறேன். என் பேரில் வருத்தப்படாதே அக்கா! நீ ஒருத்தி இல்லாவிடில் என் னுடைய கதி என்ன?" என்று இளவரசர் கூறிவிட்டு விம் மினார்.

வந்தியத்தேவனும், பூங் குழலியும் இளவரசரை மெது வாகப் படகில் படுக்க வைத் தார்கள்.

அதன் பிறகு பொன்னி யின் செல்வர் சும்மா படுத் திருந்தார். அவருடைய கண் கள் எங்கேயோ வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தன. அவருடைய வாயிலிருந்து ஏதேதோ வார்த்தைகள் குழ றிக் குழறி வந்து கொண் டிருந்தன. சிலவற்றுக்குப் பொருள் விளங்கின. பெரும் பாலும் சம்பந்தமற்ற வார்த் தைகளாகத் தோன்றின.

இளவரசரிடம் ஆலோசனை கேட்பதில் பயனில்லை என் பதை வந்தியத்தேவன் உணர்ந் தான். இந்த மிகப் பயங்கர மான ஆபத்திலிருந்து பொன் னியின் செல்வரைக் காப் பாற்ற வேண்டிய பொறுப் புத் தன் தலையில் சுமந்தி ருக்கிறது என்பதையும் அறிந் தான். ஆனால் புத்திசாலி யான இந்தப் பெண் ஒருத்தி இருக்கிறாள். இளவரசரைப் பாதுகாப்பதில் தன்னைப் போலவே இவளும் கவலை கொண்டவள்தான். பின்னர், எத்தனையோ அபாயங்களி லிருந்து தன்னைத் தப்புவித்த கடவுளின் கருணையும் இருக் கவே இருக்கிறது.

"பூங்குழலி! படகை இனி மேல் வேகமாகச் செலுத்திக் கொண்டு போக வேண்டி யதுதானே?" என்றான் வந் தியத்தேவன். பூங்குழலியின் கரங்கள் இழந்திருந்த வலி மையை மீண்டும் பெற்றன. படகு துரிதமாகச் சென்றது.

வந்தியத்தேவன் இளவர சரின் அருகிலேயே உட்கார்ந் திருந்தான். மறுபடியும் அவர் சுர வேகத்தில் கடலில் குதி த்து விட்டால் என்ன செய் வது என்பதனை நினைத்த போதே அவன் கதி கலங் கியது. ஆகையால் சர்வ ஜாக் கிரதையாக அவரைப் பார்த் துக் கொண்டேயிருந்தான். அதே சமயத்தில் மேலே செய்ய வேண்டியது என்னவென்ப தைப் பற்றியும் அவன் உள் ளம் தீவிரமாகச் சிந்தனை செய்தது.

"பெண்ணே! உனக்கு என்ன தோன்றுகிறது! நாம் துணி ந்து கோடிக்கரைக்கே போய் விடலாமா? இளவரசரைப் பாதுகாப்பதற்கு உன் குடும் பத்தார் உதவி செய்வார்கள் அல்லவா?" என்று கேட்டான்.

"ஐயா! இந்தக் காலத்தில் யாரை நம்பலாம், யாரை நம்பக்கூடாது என்று எப் படிச் சொல்ல முடியும்? என் தமையன் மனைவி ஒருத்தி இருக்கிறாள். அவள் பணத் தாசை பிடித்தவள். என் தந் தைக்குப் படி அளப்பவர்கள் பழுவேட்டரையர்கள்!" என் றாள் பூங்குழலி.

"மேலும், தங்களைப் பிடி க்க வந்த பழுவூர் ஆட்கள் இன்னும் கோடிக்கரையில் தங்கியிருக்கலாம். இளவ ரசரின் வரவை எதிர்பார்த்து மேலும் புதிய ஆட்களும் வந்திருக்கலாம்!" என்று தொடர்ந்து கூறினாள்.

அவளுடைய முன் யோச னையைக் குறித்து வந்தியத் தேவன் வியப்படைந்தான். இந்த இக்கட்டான சமயத் தில் தனக்கு அவளுடைய உதவி கிடைத்ததை எண்ணி மகிழ்ந்தான்.

"அப்படியானால், நேரே கோடிக்கரைக்குப் போவது அபாயம் என்று நீயும் எண் ணுகிறாயா?" என்றான். "அதோ பாருங்கள்!" என்று சுட்டிக் காட்டினாள் பூங்குழலி. அவள் சுட்டிக்காட்டிய திசை யில் கப்பல் ஒன்று நின்று கொண்டிருந்தது அதற்கு அப்பால் கோடிக்கரைக் கலங்கரை விளக்கின் உச் சியும் தெரிந்தது.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## பாம்பிற்கு பிராமணன் இட்ட சாபம்

ஒரு பெரிய கானகத் தில் மந்தவிஷன் என் கிற பாம்பு ஒன்று, ஒரு நாள் இரையைத் தேடிச் பார்த்தும் ஏதும் கிடைக்காததால் சோக மாக ஓர் ஏரிக்கரைக்கு அருகில் வந்து அமர்ந் தது. அந்த ஏரியில் நிறைய தவளைகள் இருந்தன. இந்தத் தவ ளைகளை எப்படியாவது தந்திர மாகப் பிடித்து உண்டு விட வேண்டும் என்று திட்டமிட்டது.



அப்போது அந்தப் பக்கம் வந்த தவளை யொன்று ஏன் இங்கு நின்று கொண்டிருக்கி றாய்? என்று கேட்டது. அதற்கு பாம்பு இன்று காலையில் நான் இரைதேடிச் செல்லும் வழியில் ஒரு தவளை குறுக்கே சென்றது. நான் அதைப் பிடிக்க சென் றேன். அப்போது ஒரு பிராமணன் மகன் புத ரின் அருகில் விளை யாடிக் கொண்டிருந் தான். நான் தேடிவந்த தவளை என்று நினைத்து, அந் தப் பிராமணனின் பிள் ளையுடைய பாதத்தைக் கடித்து விட்டேன். அவன் இறந்துவிட் டான். அதனால் கோபம் கொண்ட பிராமணன் என்னைச் சபித்து விட் டான் என்றது பாம்பு.

அந்தப் பிராமணன் நீ, இனிமேல் தவளைகளுக் குச் சேவைசெய்து வாழக் கடவாய் என்று சபித்து விட்டான். நான் இந்த ஏரிக்கரையில் உள்ள தவளைகளுக்குச் சேவகம் செய்வதற்காகக் காத்துக் கொண்டிருக்கி றேன் என்று கூறியது. அந்தத் தவளை, தவளை ராஜாவிடம் கூறியது.

அனைத்துத் தவளைக ளும் ஏரியை விட்டு வெளியே வருமாறு உத்தரவிட்டது. ஏ பாம்பே! அனைத்துத் தவளைகளையும் உன் முதுகின் மீது ஏற்றிக் கொண்டு செல்! என்று கட்டளையிட்டது.

உடனே, பாம்பு மிகவும் பவ்வியமாக தவளைகளைத் தன் முது கில் சுமந்து சென்றதில் பாம்பு சோர்வாகி விட் டது. தவளை ராஜா பாம்பிடம், ஏன் சோர் வாக இருக்கிறாய்? என்று விசா ரித்து. எனக்கு மிகவும் பசிக்கி றது என்றது பாம்பு. இனிமேல் நீ சிறிய தவளைகளைப் பிடித்து உண்டுகொள் என்று உத்தரவிட்டது.

தவளை ராஜா கூறிய தைப் போலவே அந்தப் பாம்பு சிறிய தவளைக ளைச் சாப்பிட்டுக் கொண்டும் பெரிய தவளைகளைச் சுமந்து கொண்டும் காட்டில் திரிந்தது. அப்போது அந்தக் காட்டிற்குள் நுழைந்த ஒரு புதிய பாம்பு இதைப் பார்த்து ஏன் உன் முதுகில் சுமந்து கொண்டு செல் கிறாய் என்று கேட் டது. அதற்கு அந்தப் பாம்பு, எல்லாம் காரண மாகத்தான்! காலம் கடந்தபின் உனக்கே தெரியும் என்றது.

சில நாட்களில் அந்தப் பாம்பு தவளை களை ஏமாற்றி அனைத் துத் தவளை களையும் உண்டு விட்டது. இறுதி யாகத் தவளை ராஜா வையும் சாப்பிட்டு ஏப்பம் விட்டது.

நீதி :தனது புத்தியால் தன் எதிரியை அனு சரித்து செல்வது போல் அனுசரித்து சென்று புத்தியால் வெல்ல வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையை நேசி; பிழையை மன்னித்து விடு.
- வால்டேர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தமிழ் மக்கள் நம்பி நடந்தனர் ஆனால் தமிழ் அரசியல் தலைவர்?

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமாகிய இரா. சம்பந்தன் நேற்று முன்தினம் (30) இயற்கை எய்தினார். அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பொதுவில் ஒருவர் இயற்கை எய்திவிட்டால், அவர் தொடர்பில் இரங்கல் தெரிவிப்பது நம் தமிழ்ப் பண்பாடு.

எனினும் உண்மையைக் கடந்து நாம் புகழாரம் சூட்டுவது ஏற்புடையதல்ல.

அந்த வகையில், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர் இரா.சம்பந்தன் ஆற்றல்மிக்கவர். அரசியல் அனுபவசாலி. வெளிநாட்டு இராஜதந்திரிகளை சிறந்த முறையில் கையாளக்கூடியவர். ஒரு அரசியல் கட்சியை வழிநடத்தக்கூடிய தலைமைத்துவப் பண்புடையவர்.

இவை அனைத்தும் இருந்தும் அவர் தனது ஆற்றலை – அரசியல் அனுபவத்தை தமிழ் மக்களுக்காக – தமிழ் இனத்துக்காகப் பயன்படுத்தவில்லை.

உண்மை. ஓர் இனத்தின் அரசியல் தலைவன் இறந்துவிட்டால்; அந்த இன மக்கள் கண்ணீர் விட வேண்டும். அந்த இனம் சார்ந்த தேசம் தனக்கு ஏற்பட்ட இழப்பை – சோகத்தை ஏதோவொரு வகையில் வெளிப்படுத்த வேண்டும்.

ஆனால் இரா.சம்பந்தன் காலமாகிவிட்டார் என்ற செய்தி ஒரு சாதாரண செய்தியாகக் கடந்து சென்றதைப் பார்த்தபோதுதான் இரா.சம்பந்தனின் அரசியல் செயற்பாட்டால் தமிழ் மக்கள் எத்துணை தூரம் விரக்தியும் வெறுப்பும் கொண்டுள்ளனர் என்பது தெரிய வந்தது.

ஆம், தமிழ் மக்கள் இரா.சம்பந்தனை நம்பினர். அவர் தனது அரசியல் ஆளுமையைப் பயன்படுத்தி தமிழ் மக்களுக்கு தீர்வைப் பெற்றுத் தருவார் என எதிர்பார்த்தனர்.

எனினும் தமிழ் மக்கள் இரா.சம்பந்தன் மீது வைத்திருந்த நம்பிக்கையை அவர் இம்மியும் புரிந்து கொள்ளவில்லை. அன்றி அந்த நம்பிக்கைக்கு விசுவாசமாகச் செயற்படவும் இல்லை.

மாறாக இரா.சம்பந்தன் தன்னை ஒரு கொழும்பு வாசியாகக் காட்டிக் கொண்டதுடன், தனக்குக் கிடைத்த கட்சித் தலைமை மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை அடிப்படையாகக் கொண்டு சிங்கள ஆட்சியாளர்களிடமிருந்து சலுகைகளைப் பெற்று சுகபோகமாக வாழ்ந்தாரேயன்றி, எல்லாம் இழந்து கண்ணீரும் கம்பலையுமாக நிற்கின்ற தமிழ் மக்களை அவர் கிஞ்சித்தும் நினைக்கவில்லை.

சுருங்கக்கூறின் தமிழ் மக்களுக்கு எந்த நன்மையையும் செய்யாத அவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் கந்தறுத்து ஈற்றில் இலங்கை தமிழரசுக் கட்சிக்குள்ளும் உள்ளக முரண்பாடுகளை ஏற்படுத்தி தனக்குப் பின் தமிழனுக்கு அரசியல் தலைமையே இருக்கக்கூடாது என்பதுபோல எல்லாவற்றையும் நிர்மூலமாக்கி, சிங்களப் பேரினவாதத்துக்குப் பேருதவி செய்துவிட்டு மறைந்துவிட்டார்.

என்ன செய்வது தமிழ் மக்கள் நம்பிக் கெட்ட சோகத்தோடு, கருடபுராணம் கூறும் நியமம் நடந்தாகும் என்ற நம்பிக்கையோடு அமைதி கொள்கின்றனர்.

# பொய் சொல்லி ஏமாற்றி மக்களின் வாழ்க்கையோடு விளையாட வேண்டாம் - சஜித்

(களுத்துறை)

பொய் சொல்லி மக்களின் வாழ்க்கையோடு விளையாட வேண்டாம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

பிரபஞ்சம் தகவல் தொழிநுட்ப வேலைத்திட்டத்தின் கீழ், 276 ஆவது கட்டமாக 1,177,000 இலட்சம் ரூபா பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள களுத்துறை, பேருவளை ஸேம் ரிபாய் ஹாஜியார் மகா வித்தியாலத்திற்கு வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. இதில் உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடு வங்குரோத்தடைந்துள்ள நேரத்தில், வங்குரோத்து நிலையில் இருந்து மீள்வதற்கான செயல்பாட்டில், நாட்டில் கட்டமைப்பு ரீதியாக எதிர்நோக்கி வரும் அனைத்து சிக்கல்களையும் சவால்களையும் கண்டறிந்து தீர்வு காண வேண்டும். இந்தப் பயணம் வெற்றியடைய வேண்டுமானால் நாட்டு மக்களுக்கு பொய்களைக் கூறி ஏமாற்றக் கூடாது.

இன்று நம் நாட்டின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடன் சுமார் 100 பில்லியன் டொலர்களுக்கும் அதிகமாக செலுத்த வேண்டியுள்ளோம்.

எனவே, இந்த மரணப் பொறியில் இருந்து வெளி வரக்கூடிய வழிமுறைகள் குறித்து நாம் சிந்திக்க வேண்டும். நாட்டை ஆள்பவர்கள் அனைவரும் எமது நாட்டின் தற்காலிக பொறுப்பாளர்களே என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

நாட்டுக்காக உடன்படிக்கைகளை மேற்கொள்ளும் போது தன்னைப் பற்றியோ, தனது இருப்பைப் பற்றியோ, தனது அரசியல் பயணத்தைப் பற்றியோ சிந்திக்காமல், நாட்டைப் பற்றியே சிந்தித்து செயல்பட வேண்டும்.

ஆட்சியாளர் தன்னைப் பற்றி சிந்திக்காமல், நாட்டின் 220 இலட்சம் மக்களைப் பற்றி சிந்திக்க வேண்டும். நாட்டு மக்களை ஏமாற்றி மக்களை குறைமதிப்புக்குட்படுத்தும் காலம் முடிவுக்கு வர வேண்டும்.

வங்குரோத்து என்பது கடனை செலுத்த முடியாத நிலையாகும். அதிலிருந்து விடுபட, கடனை செலுத்தும் நிலைக்கு வர வேண்டும். இதற்கு, வெளிநாட்டுக் கடனை மறுசீரமைக்கும் போது நாட்டுக்கும் மக்களுக்கும் நன்மை பயக்கும் வகையில் மறுசீரமைப்பு செயல்முறை முன்னெடுக்கப்பட வேண்டும்.

தேவையின்றிச் செய்யப் போனால், பிழைப்புக் கேற்பச் செய்யப் போனால், ஏனோ தானோ என்று செய்யப் போனால் நாட்டுக்கு நன்மை பயக்காத உடன்பாடே எட்டும். எனவே, நாட்டு மக்களின் உயிருடன் விளையாடக் கூடாது.

பொய்யான விடயங்களை முன்வைத்து நாட்டு மக்களை அரசியல் ரீதியாக ஏமாற்றமடையச் செய்ய வேண்டாம் என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

பெரும் செல்வந்தர்களை பாதுகாத்து, நாட்டின் உழைக்கும் மக்களின் தோள்களில் அசௌகரியமான முறையில் வரிச்சுமையை விதிப்பது தவறு.

இந்த திட்டத்தில், நாம் வெளிப்படையாகவும், நேர்மையாகவும், மக்களுக்கு உண்மையை விளக்க வேண்டும். மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், மற்றும் சவால்களை கையாள அனைவரும் கைகோர்த்து தியாகங்களைச்செய்யவேண்டும்

சமீபத்திய உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பில், உழைக்கும் மக்கள்தான் இந்த தியாகத்தைச் செய்தனர். அவர்களின் ஓய்வூதிய நிதியங்களில் வைப்பிலிடப்பட்ட நிதிகளை வெட்டி நாட்டின் பெரும் செல்வந்த தரப்பினரை பாதுகாத்தனர்.

பெரும் செல்வந்தர்களை பாதுகாப்பதற்காக நாட்டின் உழைக்கும் மக்களின்தோள்களில்சுமையை சுமத்துவது தவறானது என எதிர்க்கட்சித் தலைவர் இங்கு தெரிவித்தார்.

(ம-7,10)

## மோ.சைக்கிள் விபத்து இருவர் உயிரிழப்பு

குருநாகல் – தம்புள்ளை வீதியில் கலேவெல நகரத்தில் இடம்பெற்ற விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளதாக கலேவெல பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று திங்கட்கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளது.

குருநாகலிலிருந்து தம்புள்ளை நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி, பூந்தொட்டியில் மோதி கவிழ்ந்ததில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தின் போது மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்றவரும் பின்புறத்தில் அமர்ந்திருந்த இருவரும் படுகாயமடைந்துள்ள நிலையில்,

தம்புள்ளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர், மோட்டார் சைக்கிளைச் செலுத்திய நபரும் பின்புறத்தில் அமர்ந்திருந்த நபரொருவரும் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காரியமடித்த மற்றும் லக்கல பகுதிகளைச் சேர்ந்த 28 மற்றும் 40 வயதுடைய இருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.(ம-7)

## மடு அன்னையின் உருவம் பொறிக்கப்பட்ட முத்திரை நேற்று வெளியீடு

(மன்னார்)

மடு அன்னையின் திரு உருவம் பொறிக்கப்பட்ட முத்திரைநேற்று வெளியீடு செய்யப்பட்டது.

மன்னார் மடு அன்னையின் ஆடி மாதம் திருவிழா இன்று கொண்டாடப்படவுள்ளது.

இந்நிலையில் மடு அன்னை அரசியாக முடி சூட்டப்பட்டதன் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மடு அன்னையின் திரு உருவம் பொறிக்கப்பட்ட முத்திரை நேற்று மடு திருத்தலத்தில் வைத்து வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது.

மடு திருத்தலத்தின் பரிபாலகர் அருட்தந்தை எஸ்.அன்ரனி ஞானப்பிரகாசம் அடிகளாரின் ஏற்பாட்டில் நேற்று முற்பகல் இந்த நிகழ்வு நடைபெற்றது.

தபால்மா அதிபர் ரூவன் சத்குமாரவினால் விசேட முத்திரை மன்னார் மறை மாவட்ட ஆயர் கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையிடம் வழங்கி வைக்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் தபால் திணைக்கள அதிகாரிகள், கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் சத்துரி பிந்து மற்றும் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7,10,285)

## கதிர்காமம் ஆலயத்தில் பூசகர்கள் இடையே மோதல்

### ஒருவர் வைத்தியசாலையில்

கதிர்காமம் ஆலயத்தில் உதவி பூசகர் ஒருவர் அதே ஆலயத்தில் உதவி பூசகராக பணிபுரியும் மற்றொருவரால் தாக்கப்பட்டுள்ளார்.

தாக்குதலில் காயமடைந்த உதவி பூசகர் கதிர்காமம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு தற்போது சிகிச்சை பெற்று வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கோவிலுக்கு வந்த சட்டத்தரணி ஒருவரை உரிய முறையில் நடத்தாத காரணத்தினால் அதே ஆலயத்தைச் சேர்ந்த உதவி பூசகர் தாக்கியதாக தாக்குதலுக்குள்ளான பூசகர் தெரிவித்திருந்தார்.

ஆலயத்தின் பக்தர்கள் முன்னிலையில் முகம் மற்றும் மார்புப் பகுதியில் தன்னை கொடூரமாக தாக்கியதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.


முன்னதாக இந்தக் கோவிலில் பணியாற்றிய மற்றுமொரு இளைஞரையும் குறித்த உதவிப் பூசகர் தாக்கியதாகவும், அச்சம் காரணமாக இது தொடர்பில் முறைப்பாடு செய்யவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

அதிகளவான பக்தர்கள் கூடும் வழிபாட்டுத் தலங்களில் இவ்வாறான செயற்பாடுகளை தாம் கண்டிப்பதாகவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இந்நிலையில், தாக்குதல் தொடர்பில் நியாயமான விசாரணைகளை நடத்துமாறு அதிகாரிகளிடம் கோரிக்கை விடுப்பதாக மேலும் குறிப்பிட்டுள்ளார்.

(ம-7,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும் ஆங்கிலேயர் ஆட்சிக் கால நடுப்பகுதி - பகுதி V

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

07

முந்நூறு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான தேர்தலை நடத்தும் நோக்கத்திற்காக, 1976 ஆம் ஆண்டு திருத்தப்பட்ட தொகுதிகளின் எல்லை நிர்ணய ஆணைச் சட்டத்தின் விதியின்படி நாடு முந்நூறு ஒற்றை உறுப்பினர் தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு தொகுதிக்கும் எல்லை நிர்ணயம் செய்வதற்கான நடைமுறைகள் மற்றும் கோட்பாடுகள் மேற்கூறிய அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ளன. நடைமுறையில் உள்ள முக்கிய கொள்கைகள் பகுதிகளின் புவியியல் தன்மை, நிர்வாக வசதி மற்றும், மக்கள் தொகை பரவல் என்பன கருத்தில் எடுக்கப்படும்.

அரசியலமைப்பின் 121ஆவது பிரிவின்படி, பாராளுமன்றத் தேர்தல் நடத்தும் நோக்கத்திற்காக ஒவ்வொரு தொகுதிக்கும் ஒரு வாக்காளர் பட்டியல் இருக்க வேண்டும் என்றும், மதம், இனம், சாதி அல்லது பாலினத்தின்படி வாக்காளர்களை வகைப்படுத்தும் வகையில் சிறப்பு வாக்காளர் பட்டியல்கள் எதுவும் இடம்பெறக்கூடாது என்றும் கூறப்பட்டுள்ளது.

அரசியலமைப்பின் 122 ஆவது பிரிவு, பாராளுமன்றத்திற்கான தேர்தல்கள் வயது வந்தோர் (18 வயதுக்கு மேல்) வாக்குரிமையின் அடிப்படையில் இருக்க வேண்டும் என்று வழங்குகிறது.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான முந்நூறு இடங்கள் தவிர, அரசியலமைப்பின் பிரிவு 65 இன் ஷரத்து (3) இன் விதிகளின்படி 2000 ஆம் ஆண்டு வரை பெண் உறுப்பினர்களுக்கு பிரத்தியேகமாக முப்பது இடங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. இதற்காக, "மக்கள் பிரதிநிதித்துவம் (பெண்கள் உறுப்பினர்களுக்கான இருக்கைகள்) ஆணை, 1973 என்பது திருத்தம் செய்யப்பட்டு, சட்டம் உருவாக்கப்பட்டது.

சட்டத்தின் 3ஆவது பிரிவின்படி, பெண் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக தேர்தல் ஆணையம் நாட்டை 30 தொகுதிகளாகப் பிரிக்கிறது. நேரடியாக தேர்ந்தெடுக்கப்பட்ட எம்.பி.க்கள் பெண் உறுப்பினர்களை தேர்ந்தெடுப்பதற்கான வாக்காளர்களாக இருந்தனர். இது இப்போது 50 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

அரசியலமைப்பின் 48ஆவது பிரிவின்படி, பங்களாதேஷின் ஜனாதிபதி, சட்டத்தின்படி பாராளுமன்ற உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுவார். ஜனாதிபதி பதவிக்கான தேர்தலை நடத்துவதற்கான முறை மற்றும் நடைமுறைகள் ஜனாதிபதித் தேர்தல்கள் சட்டம், 1991 மற்றும் ஜனாதிபதித் தேர்தல் விதிகள், 1991 ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளன. ஜனாதிபதி தனது பதவிக்கு வந்த நாளிலிருந்து ஐந்து வருட காலத்திற்கு பதவியில் இருப்பார்.

பாராளுமன்றத்தின் மூன்றில் இரு பங்கு உறுப்பினர்களின் ஆதரவு இருந்தால் மட்டுமே குடியரசுத் தலைவரின் (ஜனாதிபதியின்) பதவி பறிக்கப்படும். இதுவரையில் குடியரசுத் தலைவரின் பதவி பறிக்கப்பட்டதில்லை.

சட்ட முன்வரைவுகளை ஆய்வதற்காகவும், சட்டங்களை சீரமைக்கவும், உறுப்பினர்களைக் கொண்ட குழுக்கள் அமைக்கப்படலாம். பாராளுமன்ற உறுப்பினர்கள் அவையில் பேசிய பேச்சு, அளித்த வாக்குகள், செயற்பாடுகள் உள்ளிட்டவற்றை நீதிமன்றத்துக்கு தெரிவிக்க வேண்டியதில்லை என்று அரசமைப்புச் சட்டத்தில் கூறப்பட்டுள்ளது

### கட்சி சார்பற்ற காபந்து அரசு

பாராளுமன்றத்திற்கு சுதந்திரமான, நியாயமான மற்றும் பக்கச் சார்பற்ற பொதுத் தேர்தல்களை உறுதி செய்யும் நோக்கத்துடன், அரசியலமைப்பின் பதின்மூன்றாவது திருத்தச் சட்டம், 1996 மார்ச் 28, 1996 அன்று உருவாக்கப்பட்டது. இச் சட்டத்தின் பிரகாரம் பாராளுமன்றத்தின் பதவிக்காலம் முடிவடைந்ததன் காரணமாக அது கலைக்கப்பட்ட பிறகு கட்சி சார்பற்ற காபந்து அரசாங்கத்தை வழங்குவதற்காக உருவாக்கப்பட்டது.

அது பாராளுமன்றம் கலைக்கப்பட்ட திகதியிலிருந்து செயற்படும். அத்தகைய அரசாங்கத்தின் தலைமை ஆலோசகர் பாராளுமன்றம் கலைக்கப்பட்ட பின்னர் தொடங்கி பாராளுமன்றத்திற்கான பொதுத் தேர்தலுக்குப் பின்னர் ஒரு புதிய பிரதமர் பதவிக்கு வரும் வரை பதவியில் இருப்பார். இந்த காபந்து அரசாங்கத்தின் தலைவர் எப்பொழுதும் கடைசியாக ஓய்வு பெற்ற தலைமை நீதிபதியாக இருப்பார். அது பத்துக்கும் மேற்படாத ஆலோசகர்களைக் கொண்டிருக்கும். அவர்கள் அனைவரும் ஜனாதிபதியால் நியமிக்கப்பட வேண்டும்.

காபந்து அரசாங்கம் என்ற கருத்து, பொது பாராளுமன்றத் தேர்தலை நியாயமான மற்றும் பாரபட்சமற்ற முறையில், அரசாங்க இயந்திரத்தில் எந்தக் கட்சி தாக்கமும் இல்லாமல் நடத்துவதற்கான அரசியலமைப்புச் சாதனமாகும்.

காபந்து அரசாங்க (NCG) முறையின் கீழ் 1996, 2001, 2008 ஆண்டுகளில் மூன்று பாராளுமன்ற தேர்தல்கள் வெற்றிகரமாக நடத்தப்பட்டுள்ளன. ஆளும் மற்றும் எதிர்கட்சி அரசியல் கட்சிகளுக்கு இடையே ஏற்பட்ட அதீத அவநம்பிக்கை காரணமாக தனித்துவ வடிவம் கொண்டு வரப்பட்டது. காபந்து அரசாங்கம் தனது கடமைகளை வெற்றிகரமாகச் செய்ததால், பங்களாதேஷின் மக்கள் பெரும்பாலும் இந்த அமைப்பில் திருப்தி அடைந்தனர்.

எவ்வாறாயினும், உச்ச நீதிமன்றத்தின் பாதகமான தீர்ப்பின் அடிப்படையில், 2011 இல் பாராளுமன்றத்தால் , 15ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் கீழ் பங்களாதேஷில் காபந்து அரசாங்கம் என்ற பிரிவு நீக்கப்பட்டது.

அரசியல் கட்சிகள் (ஆளும் மற்றும் பிரதான எதிர்க்கட்சி) இப்போது தேர்தல்கள் காபந்து அரசாங்கத்தின் கீழ் நடைபெறுமா அல்லது தற்போதைய, அரசியல், அரசாங்கத்தின் கீழ் நடைபெறுமா என்பது குறித்து மோதலில் ஈடுபட்டுள்ளன.

### பங்களாதேஷ் எல்லைப் பிரச்சனை

ஒரு நாட்டின் எல்லைக்குள் மற்றைய நாட்டின் பிரதேசமிருத்தல் (exclaves & enclaves)ஒரு உறைவிடம் (Enclave) என்பது ஒரு நாட்டின் ஒரு பகுதி (அல்லது ஒன்றின் ஒரு பகுதி) முற்றிலும் வேறு நாட்டின் பிரதேசத்தால் சூழப்பட்டிருத்தல். பிராந்திய நீர் நிலைகளுக்குள்ளும் Enclave இருக்கலாம். சில நேரங்களில் வேறொரு நாட்டினால் மட்டுமே சூழப்பட்ட ஒரு பிரதேசத்தைக் குறிக்கும். வத்திக்கான் மற்றும் சான் மரினோ ஆகிய இரண்டும் இத்தாலியால் சூழப்பட்ட இறையாண்மை கொண்ட நாடுகளாகும். இதேபோல் தென்னாபிரிக்காவால் சூழப்பட்ட லெசோதோ இறையாண்மை கொண்ட நாடாகும். Exclave என்பது இதன் மறுதலையாகும்.

இந்தியா மற்றும் பங்களாதேஷ் நாடுகளுக்கிடையே எல்லை நிர்ணயம் செய்யப்பட்ட போதும் இந்தியாவின் சில பகுதிகள் பங்களாதேஷிற்கு உள்ளும் பங்களாதேஷின் சில பகுதிகள் இந்தியாவிற்குள்ளும் காணப்பட்டன.

இதில் மேலும் விசித்திரம் என்னவென்றால் பங்களாதேஷ் நாட்டை எடுப்போமானால், 2015ஆம் ஆண்டு வரை பங்களாதேஷின் பிரதேசத்துக்குள் இந்தியாவின் பிரதேசம் இருந்தது. அந்த இந்தியாவின் பிரதேசத்துக்குள் பங்களாதேஷின் பிரதேசம் இருந்தது. அதற்குள் மீண்டும் இந்தியாவின் பிரதேசம் இருந்தது. இதேபோல் இந்தியா நாட்டை எடுப்போமானால் இந்தியாவின் பிரதேசத்துக்குள் பங்களாதேஷின் பிரதேசம் இருந்தது. அதற்குள் மீண்டும் இந்தியாவின் பிரதேசம் இருந்தது.

### இந்திய-பங்களாதேஷ் எல்லைப் பிரச்சனைக்குத் தீர்வு

இந்தியா-பங்களாதேஷ் எல்லை குறித்த 1974ஆம் ஆண்டு ஒப்பந்தத்தை அமுல்படுத்தும் வகையில், அரசியல் அமைப்பில் இது குறித்த மாற்றத்திற்கு இந்திய பாராளுமன்றம் 2015இல் ஒரே மனதாக ஒப்புதல் தெரிவித்தது. இதன் மூலம் இப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு கிட்டியுள்ளது.

இந்தியாவும், பங்களாதேஷ் உம் 4,096 கிலோ மீற்றர் நீள எல்லையைப் பகிர்ந்து கொண்டிருக்கின்றன. அசாம், திரிபுரா, மிசோரம், மேகாலயா, மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்கள் பங்களாதேஷை ஒட்டி அமைந்திருக்கின்றன. வங்கதேசத்தின் பெரும் நிலப்பரப்புக்குள் இருக்கும் தஹலா காக்ரபரி பகுதி இந்தியாவுக்குச் சொந்தமானது. இந்தப் பகுதியைச் சூழ்ந்திருக்கும் பகுதி பங்களாதேஷிற்குச் சொந்தமானது. இப்படி குழப்பங்கள் இருந்து வந்தன.

2015 ஆம் ஆண்டு யூலை 31 ஆம் திகதி நள்ளிரவு பல நாட்களாக தீர்க்கப்படாமல் இருந்த எல்லைப் பரிமாற்றம் தீர்க்கப்பட்டது. வங்க தேச நிலப்பகுதியில் வாழும் 14,000 மக்கள் முதல் 51,000 பேருக்கு இந்திய குடியுரிமை கொடுக்கப்பட்டது. அதேபோல் வங்க தேசப் பகுதியில் அமைந்துள்ள இந்தியப் பகுதியில் குடியிருக்கும் 1,000 பேர் வங்க தேச குடியுரிமை பெற்றார்கள். இந்த ஒப்பந்தத்தின் மூலம் இந்தியாவின் 17,160 ஏக்கர் நிலம் வங்காள தேசத்திற்கும், 7,110 ஏக்கர் வங்காளப்பகுதி இந்தியாவிற்கும் பகிர்ந்து கொள்ளப்பட்டுள்ளது.

### சுதந்திரத்திற்குப்பின் பங்களாதேசத்தில் நடந்த தேர்தல்கள்

### 1973 பங்களாதேஷ் பொதுத் தேரதல்

சுதந்திரத்தின் பின், பங்களாதேசம் அவாமி லீக்கால் ஆளப்பட்டது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சம்பந்தனின் இறு...

படவுள்ளது.

அங்கிருந்து அவரது பூதவுடல் நாளை புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாராளுமன்றத்துக்கு எடுத்து வரப்பட்டு, அங்கு வைத்து அஞ்சலியும் மரியாதையும் செலுத்தப்படவுள்ளது.

அதன்பின்னர் பிற்பகல் 4 மணிக்கு சம்பந்தனின் பூதவுடல் பாராளுமன்றத்தில் இருந்து அவரது சொந்த இடமான திருகோணமலைக்கு எடுத்துச் செல்லப்படவுள்ளது.

அங்கு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இறுதிக்கிரியைகள் இடம்பெறவுள்ளன.

இறுதிக் கிரியைகளை அரச நிகழ்வாக நடத்துவதற்கு முடிவு செய்யப்பட்டாலும் சம்பந்தன் குடும்பத்தின் மத காலாசார முறைப்படி அது முன்னெடுக்கப்படும் என்றும், அதன் காரணமாக வழமையாக அரச நிகழ்வாக முன்னெடுக்கப்படும் இறுதி நிகழ்வுகளில் இடம்பெறும் இராணுவ மரியாதை நிகழ்வுகள் இதில் இடம்பெறாது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம-7,10)

## சம்பந்தனின்...

மாவட்ட விருப்புப் பட்டியலில் சம்பந்தனுக்கு அடுத்துள்ள சண்முகம் குகதாசன் 2020ஆம் ஆண்டு இடம்பெற்ற பொது தேர்தலில் 16,770 வாக்குகளை பெற்றிருந்தார்.

கடந்த பொதுத் தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கீழ் போட்டியிட்டு விருப்பு வாக்குகளை பெற்றவர்களின் பட்டியலில் இரண்டாம் இடத்தில் இருந்தார்.

இந்நிலையிலேயே, இரா.சம்பந்தன் காலமானதால் வெற்றிடமாகியுள்ள பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கு சண்முகம் குகதாசன் தெரிவு செய்யப்படவுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் சார்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சி தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அறிவிக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,10)

## சம்பந்தனின் சந்...

தலைவர் இரா. சம்பந்தனின் குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்கள்.

அவருடனான சந்திப்புகளின் இனிய நினைவுகளை எப்போதும் போற்றுவேன். இலங்கையில் வாழும் தமிழர்களுக்கு அமைதி, பாதுகாப்பு, சமத்துவம், நீதி மற்றும் கண்ணியம் போன்ற வாழ்க்கையை அவர் இடைவிடாமல் பின்பற்றினார்.

அவரது பிரிவால் துயருறும் இலங்கையிலும் இந்தியாவிலும் உள்ள அவரது நண்பர்கள் மற்றும் அனைவருக்கும் ஆழ்ந்த இரங்கல்கள் எனத் தெரிவித்துள்ளார். (ம-7,10)

## எரிகாயத்துக்கு...

பெற்றுவந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த சரவணபவானந்தன் சிவகுமார் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் கடந்த 20ஆம் திகதி, தனது மீன் வாடியில் தூக்கத்தில் இருந்த போது திடீரென உடலில் தீப்பற்றிய நிலையில், அலறியடி வெளியே ஓடி வந்துள்ளார்.

அப்போது அயலவர்கள் தீயினை அணைத்து, அவரை வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

எனினும் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

அவர் தூங்கிக்கொண்டிருந்தபோது இனம் தெரியாத நபர்கள் பெற்றோல் குண்டினை வீசி விட்டு தப்பிச் சென்றிருக்கலாம் என சந்தேகப்படும் மருதங்கேணி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,10)

## விவாதம்...

நிலையில் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கடன் மறுசீரமைப்புச் செயற்பாடுகள் தொடர்பான விவாதத்தை கட்சித் தலைவர்கள் நேற்று சந்தித்தபோது விவாதத்தில் ஈடுபடுவதில்லை எனத் தீர்மானித்துள்ளதாக பாராளுமன்றத் தொடர்பாடல் பிரிவு தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சபையில் விசேட அறிக்கையொன்றை வெளியிடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

அத்துடன், பாராளுமன்ற உறுப்பினர் சம்பந்தனுக்கு மரியாதை செலுத்தும் முகமாக புதன்கிழமை அமர்வுகளை நடத்த வேண்டாம் என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர்கள் இறுதி அஞ்சலி செலுத்துவதற்காக அவரது பூதவுடல் புதன்கிழமை பாராளுமன்றத்திற்கு கொண்டு வரப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ம-7,10)

## தேர்தல்கள்...

விக்கிரமசிங்க நேற்று மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

மாத்தறை கோட்டை மைதானத்தில் இடம்பெற்ற "ஒன்றாக வெல்வோம்" மக்கள் பேரணியில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த பேரணியில் ஸ்ரீ லங்கா பொது ஜன பெரமுன மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர இந்த பேரணியை ஏற்பாடு செய்திருந்தார். (ம-7,10)

## இலங்...

இருப்பதாக அமெரிக்கா உறுதியளித்துள்ளது.

நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்கவை நேற்று நிதிய மைச்சில் சந்தித்து கலந்துரையாடியபோதே, திறைசேரியின் ஆசிய விவகாரங்களுக்கான பிரதி உதவிச் செயலாளர் றொபேட் கப்ரோத் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் பொருளாதாரஸ்திரத்தன்மை சரியான திசையில் பயணிப்பதால், ஏனைய நாடுகள் கடன் மறுசீரமைப்பு தொடர்பில், தமது உடன்பாட்டை வெளிப்படுத்தியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதன்போது, நிதி இராஜாங்க அமைச்சர் கடன் மறுசீரமைப்பு செயல்முறைக்கு, அமெரிக்க அரசாங்கம் வழங்கிய ஆதரவிற்கு தமது நன்றியை வெளிப்படுத்தியுள்ளார். (ம-7,10)

பெற்றோல் விலை குறைந்தாலும்

# முச்சக்கரவண்டி கட்டணம் குறையாது

(கொழும்பு)

பெற்றோல் விலை குறைக்கப்பட்டாலும் முச்சக்கரவண்டி கட்டணத்தை குறைக்க முடியாது எனவும், மாதம் ஒருமுறை எரிபொருள் விலையை திருத்தும்போது கட்டணத்தை குறைக்க முடியாது எனவும், அகில இலங்கை முச்சக்கர வண்டிச் சாரதிகள் சங்கத்தின் தலைவர் லலித் தர்மசேகர தெரிவித்தார்.

அரசாங்கம் எரிபொருளின் விலையை குறைத்துள்ள போதிலும், முச்சக்கர வண்டிகளை பயன்படுத்தும் மக்களுக்கு அதன் பலனை வழங்குவதற்கான முறைமையை அரசாங்கம் தயாரிக்கவில்லை எனவும் தர்மசேகர மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம-7,10)


மஹஜன சம்பத
திகதி 2024.07.01
சீட்டிழுப்பு இலக்கம் 5521
Y 2 1 0 8 7 8
அத சம்பத Y 0 8 7 8
சீட்டிழுப்பு இலக்கம் 0096
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2024.07.01
சீட்டிழுப்பு இலக்கம் - 1551
O 02 10 43 46 O
Double Chance 59701

மெகா பவர்
திகதி 01/07/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1869
I 19 17 34 47 51
71568

லக்கி 7 VIP
திகதி 2024.07.01
சீட்டிழுப்பு இலக்கம் 347
S 4 4 5 7 3 4 S
தேசிய லொத்தர் சபை

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3763
சீட்டிழுப்பு திகதி 01.07.2024
L 31 42 65 80
L 32961
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.07.01
சீட்டிழுப்பு இலக்கம் 0830
துலாம் 03 12 21 33 துலாம்
03552 27

உத்தியோகபூர்வ முடிவுகள்
01.07.2024 வெற்றி வாரம் 229 வர்ணம் ஊதா
W 3 4 8 2 9 1
54712
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.20,735,784.00
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2495 வர்ணம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 01.07.2024 தினம் திங்கள்
08 24 59 67 M
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 96,368,612.00

சனிதா
திகதி 2024.07.01 வெற்றி வாரம் 4656 வர்ணம் இளம் நீலம்
22 29 49 55 B
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.63,751,107.60
81319

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4207 வர்ணம் மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2024.07.01 தினம் திங்கட்கிழமை
11 14 33 58 மீனம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 8,468,791.20
673894

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
F 20 08 25 31 60
1671 பச்சை 01.07.2024 திங்கள்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 530,680,697.40

ஜயோதா Jayoda
திகதி 2024.07.01 வெற்றி வாரம் 2038 வர்ணம் செம்மஞ்சள்
31 39 46 50 W
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.24,140,768.80

அத கோடிபதி ADA KOTIPATHI
திங்கட்கிழமை வெற்றி வாரம்: 2321
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.124,376,127.20
06 47 55 56 F
739454


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## KBK

கொழும்புத்துறை

| A/L பிரத்தியேக வகுப்பு | கணக்கீடு A/L 2026, 2025 |
|---|---|

ஆரம்பம் 03.07.2024
புதன் இரவு 6.00

(C-0715)

வடக்கின் முதற்தர கணக்கீட்டு ஆசிரியர்

MR. BALAKAJEN SLTS
B.com(JAF), H.N.Dip-in-Acc (ATI)
Dip-in-Edu(OUSL), M.com (Hons), Acc.spl

உங்களுக்கு பொருத்தமான நேரத்தில் மாலை நேர இரவு நேர வெளி மாணவர்களுக்கான Zoom வகுப்புக்களும் நடைபெறுகின்றது.

077 4520 043



## Care Giver - பராமரிப்பாளர்

கனடா, அமெரிக்கா, ஜேர்மனி
போன்ற நாடுகளில் வேலை வாய்ப்பினை பெறக்கூடிய கற்கை நெறி - 1 Year Diploma

கனடாவில் புதிதாக உள்வாங்கப்படவுள்ள நிரந்தரகுடியுரிமையுடனான 15'000 Care Giver வாய்ப்புக்களுக்கான சர்வதேச தரமிக்க Diploma சான்றிதழுடன் Care Giver கற்கை நெறி மற்றும் Immigration Services - வீசா சேவைகள்.
(இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்)

CIMS College
49A, Chapel Street,Jaffna.
(C-0722)

College Of International Migration Skills
0777 068 777 / 077 7719 322



## win repair

குளிர்சாதனப் பெட்டி, சலவை இயந்திரம், A/C பழுதடைந்து விட்டதா? கவலையை விடுங்கள். உங்கள் இடத்திற்கே வருகிறோம். உத்தரவாதத்துடனும் திருத்தித் தருகிறோம்.

(1370)

076 834 6136



## வங்கி மீதி வசதி (Show money)

சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக் கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள்

தொடர்புகளுக்கு:

(126)

074 17 37 684



## அனைத்து நாடுகளுக்குமான விமான பயணச்சீட்டுக்கள்

குறைந்த விலையில்

- Air Ticket Date Change
- Travel Insurance
- Online Visa Appoinments
- Travel Itinerary
- Sri Lanka Visa Extension
- All Country Visa Services

(C-0722)

உங்கள் அருகாமையில் எமது நேரடி கிளைகள்

கொழும்பு| மட்டக்களப்பு |திருகோணமலை|கிளிநொச்சி புதுக்குடியிருப்பு |கொடிகாமம் |சாவகச்சேரி |புத்தூர் யாழ்ப்பாணம் |நாச்சிமார் கோவிலடி |பண்டத்தரிப்பு சுன்னாகம் |மானிப்பாய் |சங்கானை |கோப்பாய் நெல்லியடி |பருத்தித்துறை |வல்வெட்டித்துறை

V2 TRAVELS 0768226240 0768226241



## V2 VISA SERVICES கனடா

077 77 20 322
077 77 19 322

Visit Visas
Air Tickets

- கனடா PASSPORT APPOINMENTS

விமான பயணச்சீட்டுக்கள்

- Student Visas
- Online Appointments
- இந்திய Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு

(C-0722)



## காணி விற்பனைக்கு

ஊரெழு மேற்கில் 8 பரப்புக் காணி விற்பனைக்கு 2 பரப்பு, 3 பரப்பாக பிரித்து தரப்படும். ஊரெழு பலாலி றோட்டில் இருந்து 300m - 400m தூரம், நல்ல சூழல். விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

(1365)

077 617 2892



## பதவி வெற்றிடம்

பருத்தித்துறையில் இயங்கி வரும் சூரியமஹால் திருமண மண்டபத்திற்கு பின்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

❑ சமையல் வல்லுனர் (Chef)
அடிப்படை தகைமை
- வயது எல்லை 35 - 50
- துறைசார் அறிவு
- முன்அனுபவம் விரும்பத்தக்கது (05 வருடம் குறைந்தது)

❑ உணவு பரிமாறுபவர் (Waiter)
அடிப்படை தகைமை
- வயது எல்லை 20 - 40
- முன்அனுபவம் விரும்பத்தக்கது

பருத்தித்துறைக்கு அருகாமையில் இருப்பவர்களிற்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(C-0721)

077 704 6623
076 704 6623



## புதிய பிரிவுகள் ஆரம்பம்

கணக்காளர் கற்கை நெறிகள்
Chartered Accounting Courses
Business Level - I,II (06.07.2024)

தொழிற்துறைக் கணக்காளர் ஆவதற்கு
aat (Sri Lanka)
(AA1 - 06.07.2024)
G.C.E O/L பெறுபேற்றினை எதிர்பார்த்திருப்பவர்களும் கற்கலாம்,
(AA2, AA3 - 17.08.2024)

(C-0718)

Certificate Course in English

Further Details : Jaffna College Undergraduate Dept.
464, Hospital Road, Jaffna.
021 222 3362/ 021 222 9149
- 077 440 5917



வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-0723) 076 825 7716 (ஆகாஸ்)



## பணியாளர்கள் தேவை


புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள வியாபார நிலையம் ஒன்றிற்கு பெண் பணியாளர்கள் தேவை. யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

(1371)

தொடர்புகளுக்கு :
077 844 9976


# மரண அறிவித்தல்

மலர்வு
02 - 03 - 1934



உதிர்வு
25 - 06 - 2024

## கிருஷ்ணர் குணசிங்கம்

( Tea Factory Officer
மவுன்றின், வட்டவளை, பொகவந்தலாவ, ரின்சின் )

மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் ஹட்டனை வசிப்பிடமாகவும் கொண்ட கிருஷ்ணர் குணசிங்கம் அவர்கள் 25.06.2024 அன்று இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஷ்ணர் - தங்கம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பொன்னையா - செல்லம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற கமலாதேவி அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான புஸ்பலிங்கம், இராஜதுரை, சாம்பசிவமூர்த்தி, நவரட்ணராஜா மற்றும் குலசிங்கம், செல்வராணி, பரமேஸ்வரி, மீனாட்சிதேவி, இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிவநேசன்(நோர்வே), சிவரூபன், சிவதாஸ்(லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் மாலதி (நோர்வே), நந்தினி, சுயந்தா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் நிவேதா(நோர்வே), கஜந்தன் (நோர்வே), நிக்சிதா (நோர்வே), விதுஷிகா, ரித்திக் (லண்டன்), ரித்திஷ் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 03.07.2024 நாளை புதன்கிழமை காலை 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மல்லாகம் கட்டுவன் வீதி கட்டுப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நீதி மன்ற வீதி,
மல்லாகம்.(நீதிமன்றம் அருகாமை) (1362)


தகவல் : குடும்பத்தினர்
077 771 7018

அச்சுவேலி நாவலம்பதி காட்டுமலை கந்தசுவாமி கோவில் முன்னாள் பிரதம குரு, தர்மகர்த்தா, அருளாளர், சிவப்பணிச் செல்வர்

## சீனியன் சிவகுரு ஐயர்

அவர்களின் ஜனனதின நூற்றாண்டும்
20 ஆம் ஆண்டு குரு பூசைத் தினமும்

கந்தன் பணிக்கென
1924 - 09 - 24



கந்தனது பாதத்தில்
2004 - 06 - 15

சிந்தை முழுவதும் கந்தனைக் கொண்டு
முந்தை முருகனுக்கு கற்கோவில் தந்தவரே
தந்தையென எமக்கு தவத்தால் வந்தவரே
சித்தமுறு சீனியரின் சந்ததியில் மூத்தவரே
சிவப்பணிச் செல்வரே சிவகுரு ஐயாவே
அவனியிலே அவதரித்து ஆண்டு நூறு இன்று

காட்டுமலை கந்தனுக்கு பெருங்கோவில் - தந்து
நாட்டமுடன் மக்கள் எல்லாம் வணங்கியே இன்று
ஏற்றமுற வழிசமைத்த எங்கள் - ஐயா
போற்றியே பணிகின்றோம் உம் - திருவடியை

ஆனிமாதத்து கார்த்திகை நட்சத்திரம்
அவனியிலே ஐயாவின் குருபூசை தினமாக
ஆறுமுகன் திருவடியை அடைந்தனையோ
கந்தனவன் திருப்பணிக்காய் அவதரித்த நூற்றாண்டும்
20 ஆம் ஆண்டு குருபூசையோடு உம் - ஆசிக்காய்
மனமுவந்து வேண்டுகின்றோம் - கந்தனையே

(1368)

அருளாசி வேண்டி நிற்கும்

நாவலம்பதி,
அச்சுவேலி.

திரு.சிவகுரு பாலசுப்பிரமணிய ஐயர் (மகன்), அ.செல்வரத்தினம்(மகள்)
யோ.தங்கரத்தினம்(மகள்), திரு.யோ.மகேந்திரராஜா(பேரன்)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினரால் இல.191, ... வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.07.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org